# அகத்திய முனிவர்

உ

# அகத்திய முனிவர்.


கவிராஜ பண்டிதர்

ஜெகவீரபாண்டியனவர்கள்

எழுதியது.



இரண்டாம் பதிப்பு.

மதுரை,

மதரூஸ் C. வரதராஜுலுநாயுடு பிரஸில் பதிப்பிக்கப்பட்டது


*All rights reserved*] *[Price Re. 1-0-0.*

1940.

# முகவுரை.

இந்நூல், மலர்தலை உலகினுக்கு உயிரென நின்று அலகில் பல்புகழ் நிலவ நிலவிய அகத்திய முனிவரது பிறப்பு, இருப்பு, குணம், செயல் முதலிய சிறப்பு நலங்களைத் தெளிவுற வுணர்த்தும் இயல்பினை யுடையது. இஃது உருவில் சிறியதாயினும் பொருளில் பெரியது. இகத்தில் நின்றோரும் பரத்தி லுள்ளாரும் அகத்துள் வைத்துப் போற்றும் மகத்துவ மிகுத்த ஓர் மாதவமணியை மருவியுள்ளமையால் ஆதவன்போல் அருளொளி பரப்பும் மேதக வமைந்தது. பண்டைக்காலத்திருந்த நமது முன்னோர்களுடைய சரிதங்களையும் குணநலங்களையும் ஆராய்ந்தறிதல் நமக்கு இனிமையாயதோர் தனி உரிமையாகும். நமது வாழ்க்கைகளைத் தூய்மைசெய்து உயர் நிலையில் நிறுத்தி உறுதி பெறுதற்கு உயர்ந்தாரது சரித வுணர்ச்சி மிகவும் உதவியா யுள்ளது.

நினைப்பின் வண்ணமே மக்களாகிய நாம் நிலைத்து வருகின்றோம். மேலோர்களுடைய பழக்க வழக்கங்களையும், பான்மை மேன்மைகளையும் நாளும் பயின்று வருவோமாயின் அத்தன்மை நமக்கு மிகுந்த நன்மையாகும். நல்லோர் இயல்புகளைச் சிந்தித்தால் சிந்தை சிறந்து விளங்கும்; அதனால் எல்லா நலங்களும் எளிதில் சித்திக்கும். உள்ளத்தளவே மக்கள் உயர்ந்திருக்கின்றார். ஒருவன் உள்ளம் சிறந்ததானால் அவன் எல்லாரினும் உயர்ந்தவனாகின்றான். அவன் எண்ணிய யாவும் எளிதில் எய்துகின்றான். "உள்ளியது எய்தல் எளிது" என்பது வள்ளுவப் பெருந்தகை

வாக்கு. "யாது பாவித்திடினும் அதுவாகி நிற்பை" என்னும் பொருளைப் பொதிந்து வடமொழி நூல்கள் பல படியாக உரை தருகின்றன. களங்கமற்ற நெஞ்சோடு எதனை நேசிக்கின்றோமோ அதனை நாம் கைவரப் பெறுவோம். "What we love that we have" என்பது ஓர் சிறந்த ஆங்கிலப் புலவரின் ஆழ்ந்த கருத்தாகும். எமர்சன் என்னும் அமரிக்க நுண்ணறிவாளரும் இப் புலவரை வியந்து புகழ்ந்திருக் கின்றனர். மன்னுயிர்க்கு ஆக்கமாகிய இம் மன நலமும் இன நலத்தினாலேதான் ஒளிபெற்று உயர்வுறுகின்றது.

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்" (குறள்)

இனநலம் என்றது குணநல முடைய மேலோரை, இத்தகைய தெள்ளியோ ரெல்லாரும் உள்ளிப்போற்றும் வள்ளலாகிய அகத்திய முனிவரது அரிய சரிதத்தை இந் நூல் இனிது விளக்கி யுள்ளது. இதன் உள்ளுறை நலங்களை யூன்றி யுணர்ந்து உளங்கொண் டொழுகின் உயர்நலம் அடையலாம்.

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியை அழகு பெறச் செய்து இனிய முறையில் உலகில் நிலைபெற வைத்துக் கலைமகளின் தலைமகனு யுள்ள இம் முனிவர் பெருமானது சரித வுணர்ச்சி கலைபயில் மாணவர்க்குப் பெருநலந் தரும் ஆதலால் இதனை அவர் ஓதி யுணர்ந்து உயர் பயனுறும்படி கலைநலம் பேணும் அறிஞர் பெருமக்கள் உதவி யருள்வார்கள் என்று நம்புகின்றேன்.

திருவள்ளுவர் நிலையம்,
மதுரை.

இங்ஙனம்
ஜெகவீரபாண்டியன்.

# பொருளடக்கம்.

அகத்திய முனிவர்


| | | |
|---|---|---|
| 1. | பிறப்பு ... ... ... | 1 |
| 2. | இருப்பு ... ... ... | 19 |
| 3. | குணம் ... ... ... | 57 |
| 4. | செயல் ... ... ... | 67 |
| 5. | பெருமை... ... ... | 81 |

## நூலின் பயன்.

---

சிவக்கட லதனில் எழுந்தபன் னிருகைத்
தெள்ளமிழ் தருள்சிறி தடைந்து
புவிக்கடல் குடித்துத் தமிழ்க்கடல் விரித்துப்
புகழ்க்கடல் பெருக்கிய புனிதத்
தவக்கடல் குணத்தின் தனிக்கடல் குடத்தில்
தயங்கிய அருட்கடற் கதையாம்
அவிக்கடல் படிவார் பவக்கடல் படியார்
ஆனந்தக் கடல்படிந் துயர்வார்.

---

உ

சிவமயம்.

# அகத்திய முனிவர்.

## காப்பு.

உலகம் இன்பி னுயர்ந்து சமம்பெறத்
திலக மாகத் திகழ்ந்தருள் தென்முனி
அலகில் மாக்கதை யானறிந் தோதிடக்
குலவு மாமத குஞ்சரங் காப்பதே. (க)

## வணக்கம்.

திங்கள் வேணியன் தந்த செழுங்கனி
மங்கை வள்ளிகை அள்ளிய மாணிக்கம்
எங்கள் கற்பக இன்னருள் நீழலில்
தங்கு மாமுனி தாண்மலர் சூடுவாம். (உ)

## முன்முகம்.

இந்நிலவுலகம் நெடிய கடல்களைப் புடைதழுவி அகன்று பரந்து நலங்கள் சுரந்து அளவிடலரிய படி பல கோடி பொருள்களை மருவி என்றும் இனிதா நின்று நிலவு கின்றது. காலந்தோறும் சிலபல மாறுதல்கள் காணப்படி னும் தன்காட்சியை யாறாது காட்டி இஞ் ஞாலம் மாட்சி

யுற்றுள்ளது. இதன் விரிந்த தோற்றம் இறைவனின் சிறந்த ஏற்றத்தை விளக்கிக் கொண்டிருக்கின்றது. மன்பதைகள் அமர்ந்து இன்புற்று வாழ்தற்கு இனிய நிலைக்களனை யிசைந்திருத்தலால் பூமிதேவி என்று நாம் இதனைப் புகழ்ந்து போற்றுகின்றோம்.

> "அன்னையென ஆருயிர்கள் ஆரப் புரந்தருளி
> என்னபிழை செய்தாலும் ஏற்றமைந்து-பின்னையுந்தான்
> பேணி வளங்கள் பெருக்கி இனிதூட்டும்
> நீணிலமே தெய்வம் நினை."

என்றபடியே என்றும் நின்று நினைந்து வருகின்றோம். இத்தகைய இவ்வுலகம் சிறந்து வருதற்குப் பெரியோர்கள் இடையிடையே பிறந்து வருகின்றார்கள். நல்லமக்களைப் பெற்ற நற்றாயர்போல் அவர்கள் வரவால் இவ்வுலகமாதா பெரிய மகிழ்ச்சியையடைகின்றாள். ஒருகுலம் அதில்தோன்றியுள்ளவர்களின் தலைமைக்குத் தக்கபடி நலமுறுதல் போல் இந்நிலமும் நலமுறுகின்றது. உயர்ந்தோர்களாலேதான் இவ்வுலகம் சிறந்து விளங்கிக்கொண்டிருக்கின்றது. சந்திரனுடைமையால் இரவு சுந்தரமுறுகின்றது; மணத்தால் மலர்கள் மாண்புறுகின்றன; அருளால் நெஞ்சம் தெருளடைகின்றது; கண்களால் யாக்கைகள் கவினுறுகின்றன; அவ்வாறே உலகமும் மேலோராலேதான் மேன்மை யுறுகின்றது. அவர் இல்லையாயின் இவ்வுலகமானது மதியில்லாத விசும்பையும், மணமில்லாத மலரையும், அருளில்லாத நெஞ்சையும், கண்ணில்லாத முகத்தையும், உயிரில்லாத உடம்பையும் போல் பொலிவிழந்து காணப்படும். உயர்ந்தோரெல்லாம் உலகினுக்கு உயிரேயாவர். அவர் பிறந்துவருதலாலேதான் இது சிறந்து வருகின்றது. இதன் தன்மைக்கும் பெரியா

ரது உண்மைக்கும் மிக நெருங்கிய உரிமையுள்ளது. ஒரு முறை இவ்வுலகினை இனிது நோக்கி ஔவையார் கூறிய அருமைப்பாடல் ஒன்று இதனடியில் வருகின்றது. அதன் பொருளை ஆய்ந்துகாண்க.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. (புறம்.

அவல் = பள்ளம். மிசை = மேடு. வழி = இடம்.

ஓ நிலமே! நீ நாடாயிருந்தாலும், அல்லது காடாயிருந்தாலும், பள்ளமாயிருந்தாலும், மேடா யிருந்தாலும், எவ்விடத்து நல்லவர்கள் உளரோ அவ்விடத்து நீ நல்லையாயுள்ளாய்; இல்லையாயின் நீ அங்ஙனம இல்லையாகின்றாய்; இதில் உனக்குத் தனிமாண்பு யாது உளது? என்று அக் கல்விச்செல்வி நல்ல நயனோடு மிக விநயமாக வினவி இவ்வுலக நிலையை உணர்த்தியிருக்கும் அழகை இதில் ஊன்றியுணர்க. மேலோரோடு இஞ்ஞாலத்திற்கு உள்ள உரிமை இதனால் இனிதறியலாகும். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்று நூல்களெல்லாம் உரைத்துநிற்றற்கு அவரது சால்புடைமையே சான்றாய் நிற்கின்றது. நன்மக்களில்லாமல் புன்மக்கள் மட்டும் மலிந்திருப்பராயின் களையடர்ந்த காடுபோல் இவ்வுலகம் பொலிவிழந்து இழிவுறுவதாகும். "நிலம் தீ நீர் வளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்" என ஆசிரியர் தொல்காப்பியனார் வரம்பு செய்துணர்த்தி யுள்ள இஞ்ஞாலம், அறிவதறிந்து ஐந்தடங்கி நெறிநின் றொழுகும் சிறந்த மக்களால் விளங்கி யுள்ளமையால் இதற்கு உயிரென அவர் அமைந்து நிற்கின்றார்.

மக்களெல்லாரும் ஒத்த பிறப்பினை யுடையாராயினும் சிலர் தத்தம் சித்த நிலையால் சிறந்திருக்கின்றனர். மனத் தூய்மையும் வாய்மையும் மருவியுள்ள உயிரே அறிவுநல மெய்தி என்றும் பெருகியுள்ளது. அது மிக உன்னத நிலை யில் நாளடைவில் உயர்ந்து திகழ்கின்றது. விண்ணில் காணப்படும் தாரகைக் கணங்களுள் சந்திரன் விளங்கி நிற் றல்போல் இம்மண்ணில் காணப்படும் மக்களுள் குணநல முடைய மேலோர் மிகச் சிறந்து விளங்கி நிற்கின்றனர். அவரது உணர்வொளியால் பிறவுயிர்கள் பலவகை நலங்களை யடைந்து உயர்வுறுகின்றன. மழைத்தாரைபோல் புனி தமாயும் இனிமையாயும் எங்கும்பரந்து அவரது குணநலங் கள் என்றும் குன்றாமல் நின்று எல்லாவுயிர்களுக்கும் இன் பம் ஊட்டி வருகின்றன. காலத்தானும் இடத்தானும் பிரிக்கப் பட்டு அவர் மிக்க சேய்மைக்கண் இருந்தாலும் என் றும் எங்கும் அவர் தன்மைகள் நமக்கு அண்மைக்கண் அமைந்து தண்ணளி சுரந்து நன்னயம் புரிகின்றன.

இத்தகைய மேலோர்கள் காலந்தோறும் அவதரி த்து இஞ்ஞாலம் உய்ய வந்துகொண்டே இருக்கின்றார்கள் உண்மையை ஊன்றி நோக்கின் இறைவனது அருளொளிக ளாகவே தெருளுற்று அவர்கள் ஒளிர்தருகின்றார்கள். இங் ஙனம் உயர்ந்தொளிரும் மேன்மையாளரெல்லாரும் வியந்து போற்றும் பெருந்தகையாய் நமது அகத்திய முனிவர் விளங்கி நிற்கின்றார்.

அகத்தியர் என்பார் இற்றைக்குப் பல்லாயிர ஆண்டு கட்கு முன்னர் ஈண்டு அவதரித்து நின்ற ஓர் பெரியார் என் பதை அறியார் மிக அரியர். இவர் அருந்தவக் கொள்கை யில் திருந்தி விளங்கிய பெருந்தகையாளர். வைய முய்ய

வந்த தெய்வ நிலையினர். பொய்யறவொழுகிய மெய்யறிவாளர். மன்னுயிர்க்கெல்லாம் இன்னருள்செய்து எண்ணரிய நலங்களை யெங்கும் பரப்பிப் புண்ணிய நீரராய் நின்ற புனித வுருவினர். இம்முனிவர் குலதிலகத்தை மனமொழி மெய்களால் நினைந்து போற்றி வணங்கி வாழ்ந்த மாதவர் பலர்; மன்னவர் பலர்; வானவரும் பலர்; தானவரும் பலர்; முன்னிருந்தோர்க்கும் பின்வருவோர்க்கும் தவநிலைக்கு இவர் ஓர் தனி நிலையாயுள்ளார்.

இந் நிலவுலகில் நிலவிவாழும் உயிர்களெல்லாம் என்றும் நன்றியறிவோடு நின்று போற்றுதற்கு உரியார் யார்? என்று தமக்குள்ளேயே ஒருவரை யொருவர் முனிவர்கள் ஒருமுறை வினவியபோது அவர், அகத்தியரே யாவர் என அறிவுடையாரனைவரும் ஒருமுகமாக உவந்து கூறினர். அங்ஙனம் கூறினரை எதிர்ந்துநோக்கி என்ன ஏதுவால் இன்ன மேன்மை அன்னவர்க்கு எய்தியது? இவ்வுண்மைக்கு ஏதேனும் உறுதியான சான்று உள்ளதா? எனச் சிலர் துணிந்து கேட்டார். அதற்கு அவர், வேறொன்றுங் கூறாமல் வானும் கடலும் வையமும் மலையும் சான்றுகளாக வுள்ளன என்று மிக விநயமாக இனிது பதிலளித்தார்.

நமக்குத் தாயகமாயுள்ள இப்பூவலயத்தை நிலை குலையாது நிறுத்தி, இடர்களைந்து, பலவகை வளங்களையும் நிலைபெறச்செய்து, நலமுறவைத்த இவரது தலைமையை அவரது உரையால் உய்த்துணர்ந்து உள்ளந் தெளிந்து அவரனைவரும் பின்பு உவந்துபோற்றினர். ஆருயிர்கள் இன்புற அருளுருவாகிவந்த அண்ணல் என இவரை அமரரும் அன்புமீக்கூர்ந்து துதித்தார். இவர் ஒதி உணர்த்தி ஒழுகிக் காட்டிய அருளற நெறிகள் உயிர்களுக்கு என்றும் இனிய உயர் நிலை

களை உதவி வருகின்றன. வானும் வையமும் வணங்க, ஞானபானுவாய் விளங்கி, ஆன்மகோடிகளுய்ய அருள் புரிந்திருக்கும் இந்த அற்புத மூர்த்தியின் பிறப்பு, இருப்பு, குணம், செயல், பெருமை முதலியவற்றை அமைந்தவரை ஆராய்ந்து அறிந்து மகிழ்தல் நமக்குச் சிறந்த கடமையாம். நமக்கு மூல முதலாயுள்ள இச்சீலமுடையாரைச் சிந்தித்துப் போற்றலே நாம் வந்ததன் பயனும்; வருநலம் பெரிதாம்; வாழ்க்கையும் வளப்பாம்.

# முதல் இயல்.

## பிறப்பு.

பூமாது மனமகிழப் புவிமாது தினமகிழப் போதன் மேய நாமாது மிகமகிழ நல்லறங்கள் துள்ளியெழ நாரின்போங்க மாமாண்புதமிழெய்த வந்தெழுந்தசுந்தரனும்அகத்தியப்பேர்க் கோமான்மெய்ச் சரிதமவ னருள்வலியால் அறிந்தவரைகூறுகின்றேன்.

கும்பமுனி, கலசமுனி, குடமுனி, கும்ப சம்பவன் என்பன இவர்க்குப் பெயர்களாக அமைந்துள்ளன. அவையாவும் இவர் குடத்திலிருந்து உதித்தனர் என்பதை உணர்த்திநிற்கின்றன. கும்பம் = குடம். சம்பவம் = பிறப்பு. பிறவாநிலையில் வந்துள்ளவர்களது பிறப்பு முறையெல்லாம் பெரும்பாலும் புதுமையாகவே பிறந்திருக்கின்றன. அவற்றுட்சில சரித்திர ஆராய்ச்சிக்கு விருத்தமாய்க் காணப்படுகின்றன. சில, வியப்பிற்கேதுவாயுள்ளன; சில, புனைந்துரையோ என நினைந்துகொள்ள நேர்கின்றன; சில, தோற்றத்தில் இகழ்ச்சிக்கு ஏதுவாய்த் தோன்றுகின்றன; இன்ன

வற்றையெல்லாம் நம்மனோரது பிறப்பு முறையோடு ஒற்றித்து நோக்குதல் பெரும்பிழையே யாகும். எவ்வெனனில் அந்நோக்கு நம்மைப் புன்மையில் போக்கி விடுகின்றது. அதனாலேதான் நதி மூலத்தையும், முனி மூலத்தையும் புனைந்து காணலாகாதென மூதறிவாளர் புனைந்து கூறியுள்ளார். கண்டால் தம் நிலைமைக்கேற்றவாறு சில நிலைகளை மலைவாகக் காணநேரும்; அதனால் மனங் கோணலாம்; ஆகவே அவரது சிறப்பு நலங்களை மதியாது சிறுமையுறவரும். அங்ஙனம் வந்தவரை நோக்கித்தான் கபிலர் ஒருமுறை சிந்தை நொந்து

"சிறப்பும் சீலமும் அல்லது
பிறப்பு நலம் தருமோ? பேதையீரே!"

என்று ஓதி யுணர்த்தினார். கன்னனது பிறப்பு நிலையைக் குறித்துக் கிருபாசாரியார் ஒருமுறை சிறிது இகழ்ந்து கூறியபொழுது துரியோதனன் பெரிதும் சினந்து "பெரியாரது பிறப்பின் பெற்றியை யார்காணும் காணவல்லார்? அவர் தம் அருமையறிந்து போற்றாமல் சிறுமைகண்டு தூற்றுதல் அறிவிலிகள் செயலேயாம்;" என்று விரைந்தெழுந்து அவையிலிருந்தவ ரெல்லாரும் வியந்துகொள்ளும்படி முழங்கி நின்றான். அன்று அவன் முழங்கி மொழிந்ததை அடியில்வரும் பாடலால் இனிது காணலாம்.

"அரிபிறந்த தன்று தூணில்; அரனுமவே யிலாயினான்;
பரவையுண்ட முனியும், இப்பரத்துவாசன் மைந்தனும்
ஒருவயின்கண் முன்பிறந்தது; ஒண்சரத்தி னல்லவோ
அரியவென்றி முருகவேளும், அடிகளும் பிறந்ததே? (1)

கற்றவர்க்கும், நலனிறைந்த கன்னியர்க்கும், வண்மைகை
உற்றவர்க்கும், வீரரென் றுயர்ந்தவர்க்கும், வாழ்வுடைக்

கொற்றவர்க்கும், உண்மையான கோதில்ஞான சரிதராம்
நற்றவர்க்கும், ஒன்றுசாதி; நன்மைதீமை இல்லையால்." (2)
(பாரதம்)

பிறப்பு நிலையைக்குறித்து எவரையும் பிழைபடப் பேசாதிருத்தற்பொருட்டுத் துரியோதனன், மேலே சுட்டிக்காட்டியுள்ளாரை யுய்த்து நோக்குக. அடிகள் என்றது கிருபரை. அவர் பிறப்பு நாணல் என்னும் புற்புதரிலிருந்து தோன்றியதென்ப. பிறப்பில் தாழ்ந்தவன் என்று கன்னனை இழித்துப்பேசிய நீ உன் பிறப்பினைச் சிறிதும் எண்ணி நோக்கவில்லையே! என்று உம்மை கொடுத்து மன்னன் அவரை இடித்துக்கூறியிருத்தல் காண்க. தம் முதுகைத் தடவிப் பாராமலே பலர் இவ்வாறு தலைதெரியாமல் புலையாடுகின்றனர்; ஒத்த பிறப்பினை யுடைய மக்களாகிய நாமெல்லோரும் ஒரே இறைவனுடைய பிள்ளைகளே என்னும் உண்மையான உணர்வில்லாமல் தாம் ஒரு நலமு மிலராயிருந்தும் குலநலம் பேசிச் சிலர் இழிந்தொழிதல் மிக இரங்கத்தக்கதாம் என எதிர்ந்து சினந்து இங்ஙனம் அவன் சொல்லாடியபோது எல்லாரும் மகிழ்ந்தார். பொல்லாதவனு யிருந்தும் இவ்வளவு நல்ல தன்மைகளைப் போதித்தானே யென்று புகழ்ந்தார். தனக்கு இதமாக உரைத்திருந்தாலும் உலகம் உணர்ந்தொழுகும்படியான உறுதி யுண்மைகளை எவ்வளவு அழகாக இதில் அவன் உணர்த்தியுள்ளான் என்று முனிவரும் வியந்தார். இங்ஙனம் குலங்குத்திப் பேசுவாரது புலங்கெட்ட புன்மையை நோக்கித்தான் "கல்லா ஒருவன் குலநலம்பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே" என்று பின்னொரு மன்னனும் பேசி நிறுத்தினன். ஆன்றோர்கள் தோன்றிய நிலையினை யூன்றி நோக்காது அவர்தம் சான்றாண்மைகளையே சிந்தித்து வழிபடல்வேண்டும். ஒரு முனி

...து வரவினை யறிவதிலும் வந்து நின்று இங்கு அவன் புரிந்துள்ள உயர்வினை யறிதலே பெரிதும் நலமாம். அவர் மரபு பரமனுறவோடு கலந்த ஓர் தனி மரபாகும். சிறுமை காணாது அவர் பெருமைகண்டு, அவர் செயல்வழி ஒழுகலே மக்கட்குச் சிறந்த நன்மையாம். நறுமணங்கமழ்ந்து சீதளமிருந்து இனிதாத் தெளிந்திருக்கும் தண்ணீரைக்கண்டபொழுது அதனை வாரிக்குடித்துத் தாகம்தணியாமல் மாறி நின்று இந்த நீரூற்று எங்கிருந்து வருகிறது? எவ்வளவு தூரமுள்ளது? எவ்வளவு நிலையினது? இதன் முடிவிடம் யாது? இதனைச் செய்தவர் யாவர்? என இன்னவாறு பலபடியாக எண்ணி யாராய்தல் என்னபயனும்.

முன்னர் ஒருமுறை தன்னைப் பசுமகன் என்று இகழ்ந்த அந்தணரைப்பார்த்து ஆபுத்திரன் சிந்தைநொந்து, செய்தவ முடையார் சிறப்பினை நோக்கிப் போற்றாமல் பிறப்பினை நோக்கிப் பிழைபடுதல் பேதைமையே யாமென இரங்கி உரைத்தான். அன்று அவன் கூறியபடியை அடியில் காண்க.

"ஆன்மகன் அசலன்; மான்மகன் சிருங்கி;
புலிமகன் விரிஞ்சி; புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ? கேச கம்பளன்;
ஈங்கிவர் நுங்குலத்து இருடி கணங்களென்
றோங்குயர் பெருஞ் சிறப் புரைத்தலு முண்டால்
ஆவொடு வந்த அழிகுல முண்டோ?
நான்மறை மாக்காள்! நன்னு லகத்து" (மணிமேகலை)

இதில் அவன் குறித்திருக்கும் பெரியார்களுடைய பிறப்பு நிலைகளையும், குறிப்புகளையும் கூர்ந்து நோக்குக.

ஆற்றினிடை வலைச்சிதன்பாற் பிறந்தவரும், செட்டாற்றி
னருகின் நாணல்

தூற்றினிடைப் பிறந்தவரும், தோகேடத்தில் பிறந்தவரும்
தோற்று மெய்வேர்

ஆற்றினிடைப் பிறந்தவரும், உள்ளத்திற் பிறந்தவரும்,
ஒருமான் ஈனும்

ஈற்றினிடைப் பிறந்தவரும், கிளிவயிற்றில் பிறந்தவரும்
எதிர் கொண்டாராம்."

(பிரபோத சந்திரோதயம்)

இயற்கைக்கு மாறான பிறப்பு முறைகளும், அங்ஙனம் பிறந்து வந்தார் பின்பு சிறந்த முனிவர்களாய்த் திகழ்ந்து நின்ற திறங்களும் இதன் கண்ணும் விளங்கியுள்ளன காண்க. ஞான சீலராய் இசை திசை பரவ எழுந்து நிற்கும் ஏசுநாதர் கன்னிவயிற்றில் பிறந்தார் என்னும் உண்மையையும் ஈண்டு உளங்கொண்டுணர்க.

இங்ஙனம் நம் அறிவாராய்ச்சிகளுக்கு எட்டாதவகையில் பெரியார் தோற்றங்கள் பல பெருகியுள்ளன. வினை வயத்தராய் வரும் பொதுமக்களினும் அருள் வயத்தராய் அவதரிக்கும் அம்முனிமக்களுக்கு இத்தகைய வேறுபாடுகள் சில பெரும்பாலும் வேண்டப்பட்டுள்ளன. தேவ குமாரர்களாய் நிலவி நிற்கும் அவர்தம் வரவு முறைகள் இப் பாவவுலகில் பகுத்தறிதற்கு முடியாதபடி முடிந்து நிற்கின்றன. அவ்வை அவர்களை நாம் வியந்து போற்றுதற்கு ஏதுக்களாகவும் ஒரு வகையில் அமைந்து நிகழ்கின்றன

இவற்றை நுணுகி நோக்குமாறு விழைந்து ஊக்கியெழின் மலைவும் குலைவும் பல மேனோக்கி எழுவனவாம்.

"முனிமூலம் காண்டற்கு மூண்டுநீ முயன்றுழலல்
தனிமூலம் அறிதற்குத் தருக்குதல்போல் சலமேகாண்;
துனிமூலம் அறுமாறு சொற்றஅவர் நெறிநின்று
இனிமூலம் உருவகைநீ இசைந்தொழுகல் இன்பாமே"

என்பதும் ஈண்டு எண்ணத் தக்கது. இவை யாவும் உண்மையே யாயினும் ஒருவனது ஏற்றத்தைக் கண்ட போது அவனுடைய தோற்றத்தையும் காண விரும்புவது யாவர்க்கும் இயல்பாகும் ஆதலால் இவரது தோற்ற இயல்பினை யீண்டுச் சிறிது துருவியறிவோம். இவர் தோன்றியதைக் குறித்துத் தமக்குத் தோன்றியவாறே பலரும் பலவாறு கூறுகின்றனர். எட்டியும் சுட்டியும் அறிய லாகாதபடி பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே இவர் தோன்றியுள்ளாராதலால் இவரது பிறப்பின் வரலாறு சரித்திரக் காட்சியைக் கடந்து நிற்கின்றது. அதனால் இவர் வரலாற்று முறையில் பல பிளவுகள் காணப்படுகின்றன. ஆயினும் பெரும்பான்மையும் சிறந்ததாகத் தெளிந்தது இதனடியில் வருகின்றது.

## தோற்றம்.

ஆதியூழியில் அயன் ஒரு வேள்வி செய்தான். தன் படைப்பிலுள்ள பல்லுயிரும் நல்லறங்களும் எங்கும் நன்கு நடைபெற்றுத் தன் பதம் என்றும் நின்று நிலவும் படி அதனை அவன் நினைந்து புரிந்தான். அதில் மந்திர முறை

யோடு பல மங்கலகலசங்கள் சூழ வைக்கப்பட் டிருந்தன. முன்னிய வேள்வி முறையே முற்றி இனிது முடிவுற்ற போது அவற்றுள் முதன்மையாயிருந்த கும்பத்திலிருந்து ஓர் செம்பொற்சோதி வெளியே திகழ்ந்து தோன்றியது. அங்கிருந்தவர் யாவரும் அதனைக்கண்டு வியந்தனர். அது பொழுது எங்கணும் இன்பம் இசைந்து பரந்தது. மங் கலக்குறிகள் பல பொங்கி மலிந்தன. எல்லா ருள்ளங்களி லும் நல்ல உணர்ச்சிகள் துள்ளி யெழுந்தன.

"போதன் பண்டுசெய் புனிதநல் வேள்விவாயமைந்த
சீதமங்கலச் செழும்பசுங் கும்பத்திற் சிறந்த
மாதவந்திரண் டெழுந்ததென் றேவரும் மகிழச்
சோதியாய் ஒரு வுருவந்து தோன்றிய தம்மா! (1)

தேவருள்ளமும், சித்தர்கள் உள்ளமும், சிறந்த
மூவருள்ளமும், முனிவர்க ளுள்ளமும், மும்மைப்
பூவிலுள்ளபல் லுயிர்களும், புத்தியுள் இன்பம்
மேவிநின்றன; அவ்வுரு மேவிய பொழுதே." (2)

அங்ஙனம் மேவிவந்த அவ் இனிய ஒளிப்பிழம்பே பின்பு இம் முனிவடிவாய் அமைந்து மிளிர்ந்து நின்றது. மங் கல கும்பத்திலிருந்து தோன்றிய காரணத்தால் இவர் கும்ப முனி எனப் பெற்றார். அவ்வடிவம் குறுகி யிருந்தமை யால் குறுமுனி எனவும் இவர் கூறநின்றார். ஆயின் இவர் க்கு வெளிப்படை யாகவும் சிறப்பாகவும் வழங்கி வருகிற அகத்தியன் யென்னும் பெயர்க்குக்காரணம் யாதோ? எனின், அதற்குக் காரணம் பலவகையாகக் காணப் படுகின்றது.

அவற்றுட் சிலவற்றை வேண்டிய அளவு ஈண்டு விளக்கிக் காட்டுதும்.

அகம் என்னும் சொல் மனம், மனை, மலை, இடம் முதலிய பலவகைப் பொருள்களையு முணர்த்திவரும்.

"மனமும் உள்ளும் மனையும் பாவமும்
புவியும் மரப்பொதுப் பெயரும் அகமே" (பிங்கலந்தை)

"அகம் மனம் மனையே பாவம் அகலிடம்உள்ளுமாமே"
என்பது நிகண்டு. இதனை அடியுறையாகக் கொண்டு அதற்குக் காரணம் காணலாகும்.

நான் என்னும் அகத்தைப் போக்கிநின்றவ ராதலால் இவர்க்கு அகத்தியர் எனப் பெயர் வந்ததெனவும்,

அகமாய் நின்ற விந்தமலையின் அகத்தை அடக்கின மையால் அப்பெயரை இவர் அடைந்தார் எனவும்,

அகம் என்னும் மனத்தை அடக்கினமையால் அப்பெயர் இவர்க்குச் சார்ந்ததெனவும்,

அகமாகிய பாவத்தைப் போக்கினமையால் அது போந்தது எனவும்,

அகமாகிய இவ் அகலிடத்தை நிலைபெறச் செய்தமையால் அது நிலைபெற்றதெனவும்,

அகமாகிய தம் முள்ளத்தில்வைத்து எல்லாரும் போற்றநின்றமையால் அது பொருந்தி நின்றதெனவும்,

அகமாகிய மனையிலிருந்து தம் மனைவியோ டமர்ந்து இல்லறத்தை இவர் இனிது நடாத்தினமையால் அஃது இயைந்த தெனவும்,

அகத்தியம் என்பது அவசியம் எனப் பொருள்படுமாதலால் இவ் வுலகிற்கு அவசியமாய் அஃதாவது இன்றியமையாது நின்றிருந் தமையால் அது நேர்ந்ததெனவும், இன்னவாறு பல வகையாக ஏதுக்களை இசைத்துக் காணும்படி இப்பெயர் இசைந்துள்ளது.

இனி, தமிழுக்கு உயிராதாரமாய் இவர் உற்றிருந்தமையால் அவ் இயைபு தோன்ற அகத்தியன் என இவர் அழைக்கநின்றார் எனினுமாம். என்னே இயைபு? எனின், "அகர முதல் னகர இறுவாய்" என்ற இயலுரையின்படி அகரத்தை முதலிலும், னகரத்தை இறுதியிலும், தமிழ்மொழி அமையப் பெற்றிருத்தல்போல் அதனை வளர்த்து வந்த இவர் பெயரும் அவ்வாறே முதலில் அகரமும் முடிவில் னகரமும் முடியக்கொண்டுள்ளமை காண்க.

இனி, எம்பெருமானாகிய ஆறுமுகத் தெய்வத்தின் அருள்மிகப் பெற்றவராதலால் அம் மூர்த்தியின் மந்திரம் ஆறெழுத்துக்களால் அமைந்து சடாக்கரம் என விளங்கி நிற்றல் போல் அவரடியவராகிய இவர் பெயரும் ஆறு எழுத்துக்களால் அமைந்து அகத்தியன் என நின்றதெனினுமாம் இன்னணம் பலவாறாகக் காரணம் கருதிப் பகுத்துப் பகுத்துப் புலவர்கள் அதனைப் பாராட்டுதற்குக் காரணம் இப்பெருமானுக்கு அது பெயராய் அமைந்து நிற்கும் பெருமிதமே யாம். "பேர்சோல்லி வாழலாம் பிள்ளை தலைமுறைக்கு" என்று சொல்லும் பழமொழி இங்கு உள்ள நின்றது. இவர் பெயரைக் கேட்டவுடனே ஓர் பெரியார் என்னும் புனித வுணர்ச்சி எவர் மனத்தும் இனிது தோன்றும்.

இசைதிசை பரவ இங்ஙனம் பெரும்பேராளராய் விளங்கி நிற்கும் இவ் அருங்குணக் குரிசிலை அருந்தவ ரனைவருந் தமக்கோர் பெரும்பேருக நிரும்பி நின்றூர். பொறிகளை யடக்கி அருள்நெறி நின்று இவர் தெருளுடன் ஒழுகியதை க்கண்டு தேவரும் வியந்தனர். இவர் தத்துவக் கலைகள் முற்றவுந் தெளிந்த வித்தகக் கலைஞர். முத்திக் குரிய ஞான நிலை, யோகநிலை முதலிய உத்தம நிலைகளிலெல்லாம் இவர் உயர்ந்திருந்தனர். அதனுல் ஞானிகள் இவரைத் தத்துவஞானி என்பர்; யோகிகள் இவரைத் தம் இனத்தைச் சார்ந்த யோகியர் என்பர். சித்தர்கள் முதலிய ஒவ்வோர் உத்தமர்களும் தத்தம் இனத்தில் வைத்துத் தலைவராகச்சாற்றி இவரைப் போற்று கின்றனர்

"பூரணப்பரம் பொருளின்முக் குணமெனப் பொலியும்
காரணத்தினர் மூவரில் ஒருவனும் கமலன்
ஆரணத்தலை நிலையினின் றருண்முதற் புதல்வன்
சீரணப்படா அகத்திய முனிப்பெயர்த் தெளிஞன். (1)

ஞானவான்கள் மெய்ப்பரத்தருள் சகளமா நவில்வர்;
ஈனமின்றிய யோகியர் தமதிறை என்பர்;
வானமேற்படர் சித்தர்தம் இனத்தனு வகுப்பர்;
ஆனதாலனைத்தினும் வலான் அவனெனத் தகுமே" (2

(புலவர்புராணம்)

என முருகதாசர் இப்பெருமானை உலகம் கொண்டிருக்கும் நிலையினைக் குறித்து இங்ஙனம் அருளியுள்ளார். இன்னவாறு பல நூல்களிலும் இவரது சிறப்பு நலங்கள் குறிக்கப் பட்டுள்ளன. இவரது தெய்வப்பெற்றியை நினைந்து யாவரும் வியந்துளார். தேவரும் புகழ்ந்துளார்.

இவரது தோற்றத்தால் இவ்வுலகில் தோன்றியிருக்கும் நலங்கள் பல. "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு, எல்லார்க்கும் பெய்யும் மழை" என்றது ஔவை மொழி. வானம் வழங்கி இம்மாநிலம் விளங்க வேண்டுமாயின் பெரியாரை இது பெற்றிருத்தல் வேண்டும்; மெய்யறிவாளராய மேலோரை மேவவில்லையாயின் இவ்வையம் வெய்யதாகி மையும் என்க.

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். (குறள்.)

என்னும் இப் பொய்யாமொழிக்கு நம் முனிவர்பெருமான் ஓர் பொருளாய் நிற்றலைப் பொருந்தியுணர்க. தன்னுயிர்க்கு இரங்கான் பிறவுயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன் என இவ் அண்ணல் மன்னி நின்றதனலன்றோ இவ்வுலகம் இன்றும் இவ்வகை நிலைமையில் மன்னியுள்ளது.

"உண்டால் அம்ம இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியருண் டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்;
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே." (புறம்.)

முயலுநர் உண்மையானே இவ்வுலகம் உண்டு எனக் கொண்டு காண்க. அமிர்தம் கிடைத்தாலும் அதனைத் தனித்து

உண்ணார்; பகுத்தே உண்பர்; அல்லல்கட்கு அஞ்சார்; சோம்பி யிரார்; மறதியுறார்; கவலை கொள்ளார்; புகழையே பேணுவார்; பழிக்கு நாணுவார்; பண்பமைந் தொழுகுவார்; என்னும் இப்பெற்றியோரே பெரியோர் என இது விளக்கி நிற்றல்காண்க. இளம்பெருவழுதி என்னும் பெரும்புலமையா ளர் உளங்கனிந் துரைத்த இவ்வளங்கெழு பாடலின் நலம்பெ றுபொருளை உளம்பொதிந்துணர்க. உணரின், உணருந்தோ றும் உவகைமீக்கூர்ந்து உள்ளம் உயர்ந்து நிகழ்தலை உணரலா கும். ஒருவன் இங்கு மனிதனைகப்பிறந்தால் இவ் இனியகுண ங்களை யடைந்து அவன் புனிதனுகவேண்டும். அவன் பிற ப்பு இவ்வுலகிற்கு ஓர் பெருஞ்சிறப்பாகும். அவ் வாழ்வே உலகியலுக்கு ஓர் இனிய எல்லையாகி உயரிய நிலையாய் என் றும் நிலவி நிற்கும். அங்ஙனம் வாழ்பவன் பிறப்பால் மனி தனயினும் சிறப்பால் தேவனுக மதிக்கப் படுவான். கருவி லேயே தெய்வத்திரு வுடையராய்த் தோன்றி விளங்கும் மெய்யறிவாளரைப் பெற்றபோதுதான் இந் நிலமகள் பெரு மகிழ்ச்சி யடைகின்றாள்.

இங்ஙனம் சிறப்புறு பிறப்போடு திகழ்ந்துநின்ற நமது அருட்பெருந் தகையார் இமயத்திற்குத் தென்பாலுள்ள தமனியம் என்னும் அழகிய மலைச்சாரலில் முதலில் இனி தமர்ந்திருந்தார். தவவொழுக்கங்கள் நிரம்பிய முனிவர் பலர் இப்புனிதமூர்த்தியைப் புடைசூழ்ந்து வாழ்ந்தார். சாம்பூ நதம் என்னும் உயர்ந்த பொன்னால் அமைந்த சிறந்த தெய் வப் பதுமைபோல் அவரிடை இவர் திகழ்ந்திருந்தார்.

"நடந்தாலும் இருந்தாலும் நவின்றாலும் துயில்கொண்டு
கிடந்தாலும் விழித்தாலும் கிளர்முடி மன்னவர் முதலோர்

தொடர்ந்தாலும் தொழுதாலும் துதித்தாலும் அவமதித்துக் கடந்தாலும் மெய்ஞ்ஞானி கமலஇலைப் புனல்போல்வான்."

என்றபடி இளமையிலேயே இத்தகைய பெருஞான வள்ளலாய் இவர் பிறங்கி நின்றார். அறுமுகப்பெருமானைப் புடைசூழ்ந்து அமரர் கணங்கள் நிற்பனபோல் இவரைச் சூழ்ந்து முனிவர் கணங்கள் மிக மகிழ்ந்திருந்தன. பாலப்பருவத்தர்; சீலம் பழுத்தவர்; குறுகிய வடிவினர்; பெருகிய அறிவினர்; தெரிவருந்திண்மையர்; பொருவருந்தன்மையர் என இவரது வியக்கத்தக்க மேன்மைகளைக் குறித்து யாவரும் புகழ்ந்துரையாடி நாளும் போற்றி நின்றனர். ஞானவுலகில் இவர் ஒரு வானவொளி போல் வயங்கி விளங்கினர். உலகம் இன்புறப் பிறந்து அருந்தவக்கொழுந்தாய் இங்ஙனம் இவர் விளங்கி யிருந்தார்.

நேரிசை வெண்பா.

தெண்டிரைசூழ் ஞாலஞ் சிறந்து திகழவான்
அண்ட ரெவரும் அகமகிழப்—பண்டைமறை
வேதனுயர் வேள்விவாய் மேவிவந்த ஐயனிரு
பாத மலர்நமக்குப் பற்று.

# இரண்டாவது இயல்

## இருப்பு.

---

பொன்பூத்த மலர்பூத்த புகழ்பூத்த விதிபூத்த புவனமெல்லாம்
மன்பூத்த சூர்பூத்த வலிபூத்த அயில்பூத்த வரதன் பூத்த
தென்பூத்த அருள்பூத்துத் தேன்பூத்த தமிழ்பூத்துத் திசை
களிக்கும், இன்பூத்த இசைபூத்து எழில்பூத்த குறுமுனி
தாள் இறைஞ்சி வாழ்வாம்.

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்தியிருந்த அருந்தவரனைவரும் அமர்ந்து சூழ இப் பெருந்தகையாளர் தமனிய நிலையில் முதலில் சிறந்து வீற்றிருந்தார். புனிதராகிய முனிவர் குழாத்துள் இளஞ்சூரியன்போல் இம் முனிவர் பெருமான் இனிது திகழ்ந்தார். வேண்டிய கலைகளை இவர்பால் விளங்க உணர்ந்து அவர் உளங்களி கூர்ந்தார். நாளடைவில் உம்பரும் இம்பரும் உவந்துபோற்ற இவர் உயர்ந்து விளங்கினார். இங்ஙனம் இவர் விளங்கி வருங்கால் உலகம் இன்புற இறைவன் திருமணம் இமயமலையில் நிகழ்ந்தது. அவ் அருமைக்கோலத்தைக் காண விரும்பி அமரர், விஞ்சையர், சித்தர், கந்தருவர், முனிவர் முதலிய அனைவரும் திரண்டு போய் அங்கு அமர்ந்திருந்தனர். நமது குறு முனிவரும் அவண்போந்து பரமனருளை நினைந்து ஓர் இனிய இடத்தில் தனியமர்ந்திருந்தார். மணத்திற்குக் குறித்தகாலம் வந்தது; உயிர்க்கணங்கள் யாவும் உளங்களித் தெதிர்நோக்கி நின்றன. மலர்மகளும் கலைமகளும் மலைமகளாகிய உமையம்மையை உரிமையோடு அலங்கரித்து நின்றனர். அமரமங்கையரனை வரும் கனிந்த அன்போடு நிறைந்து நெளிந்தனர். செம

பொற் கோயிலிலே அழகிய மணி மண்டபத்திலே விழுமிய நலங்கள் பல விளங்கி நின்றன. திருமாலாதியர் உவகைமீக் கூர்ந்து மருங்குசூழப் பெருமான் எழுந்தருள நின்றார். அது பொழுது வேதங்கள் முழங்கின. கீதங்கள் கிளர்ந்தன. படகை சல்லரி குடமுழா முதலிய நாதங்கள் வளர்ந்தன. சித்தர் கந்தருவர் முதலிய தேவகணங்கள் யாவரும் மகிழ்ந்து திரண்டு மனமுருகித் துதித்து மலர்மாரி பொழிந்தனர். பல கடல்கள் ஒருங்கெழுந்து முழங்கி வந்தனபோல் திசைக ளெங்கும் இசைகள் எழுந்தன.

'அருமைநாயகன் வருகின்றான்; அடிமுடி அரியயன்அறியாத பெருமைநாயகன் வருகின்றான்; உலகெலாம் பெற்றருள்பெரு மாட்டி, திருமணஞ்செய வருகின்றான்; நுதல்விழித்தெய்வங் கள் மணவாளன், வருகின்றான்; வளநிறைவொடு குறைவிலா வாழ்வினன் வருகின்றான்;

அமரர்நாயகன் வருகின்றான்; ஆலமுண் டமரர் தேவியர்க்கெ ல்லாம், தமதுமங்கலம் தந்தமக்கருளிய தனிமுதல் வருகின் றான்; நிமல நிட்கள நிராமயன் வருகின்றான்; நினைப்பவர் மல மாயைத், திமிரபாற்கரன் வருகின்றான்; எனப்பல சின் னங்கள் பணிமாற.'' (திருக்குற்றாலப்புராணம்)

இன்ன வகையாக முன்னும் பின்னும் பன்னரிய படி எங்கும் இன்னொலிகள் எழும்பின. அவ்வமயம் கண்ணொளி பரப்பிக் காணமுடியாதவாறு எண்ணரிய உயிர்த் தொகை கள் நண்ணி நின்றமையால் இமயம் சாய்ந்தது; அதனால் வடதிசை தாழ்ந்தது. உலகம் நிலை குலைந்தது; உயிர்கள் அஞ்சி உள்ளங்கலங்கின; தேவர்களும் தியங்கினர்; மாதவர் களும் மயங்கினர்; நாகரும் நடுங்கினர்; யாவரும் ஒடுங்கி

னர்; சேடனும் திகைத்தான்; பேரமலையொடு எங்கும் பெருந்திகி லெழுந்தது; அயனும் மாலும் அண்ணலை யடித்து அன்னே! என்னை? ஈது! என்றார். அவர் புன்னகைசெய்து இப்புனிதரை யழைத்தார். இவர் நுழைந்து புகுந்து போய்ப்பணிந்து நின்றார். அவர் இனிது நோக்கி "முனிவர் திலகமே! நீ தென்திசை சென்று பொதியமலையில் நின்றால் இவ்வுலகம் சமமாகும்; எங்கள் திருமணமும் இங்கு நன்கு நிறைவேறும்" என்றார். அதனைக் கேட்டவுடனே இவர் நாட்டநீர் சிந்தி நாணி வளைந்தார்; வாட்டமீக் கூர்ந்து மறுகி நோக்கினார்; மாலாதி மேலோரெல்லாரும் ஈண்டுமேவிநிற்ப இப்பேரருளை எனக்கா பேணி அளிக்கின்றீர்! என்று தமக்குள்ளேயே பேசிக்கொண்டார்; ஆயினும் கூசிநின்றார்; தம் பெருமை தாம் அறியாத்தன்மைய ராதலால் இப்பெரிய காரியம் குறியேனாகிய என்னால் எப்படி? முடியும் என்று எண்ணியுளைந்தார்; அண்ணலை நோக்கி அகங்குழைந்தார்; அடியேன் இதனைச் செய்யவல்லனோ? என்று மீளவும் தாளில் விழுந்து தாழ்ந்து நின்றார். அன்று இவர் சொன்னபோது அம் முன்னவன் அருளிச்செய்த உண்மையை இதனடியில் காண்க.

அரன் அருளியது.

என்னக் குறிய முனிவன்றனை எந்தை நோக்கி
உன்னைப் பொருவு முனிவோர் உலகத்திலுண்டோ?
அன்னத்தவனும் உனைநேர்கிலன்; ஆதலால் நீ
முன்னிற் றெவையும் தவறின்றி முடித்தி மன்னே. (1)

வேறுற்றிடு தொன்முனி வோர்களில், விண்ணுளோரில்,
ஈறுற்றிடுமோ இதுசெய்கை? எவர்க்கும் மேலாம்

பேறுற்ற நின்னால் முடிவாகும்; பெயருகென்று
கூறுற்றிடலும் முனி யீது குறித்துரைப்பான். (2)

அகத்தியர் இசைத்தது.

வான்செய்தமேனி நெடுமால், மகவேள்வி மன்னன்,
தேன்செய்தகஞ்சத்து அயன்நிற்க; இச்செய்கைநீயேன்
தான்செய்திடவே பணித்திட்டனை; தன்மை யீதேல்
நான்செய்ததுவே தவம்போலும் நலத்த தெந்தாய்.
(கந்தபுராணம்)

இதனால் இவரது அருமை பெருமைகள் இனிது அறியலாகும். எல்லாம் வல்ல இறைவன் இவரை நோக்கிப் "பிறரெவரும் உனக்கு நிகரில்லை" என்று சொல்லியுள்ளார் என்றால் இவருடைய தெய்வப்பெற்றியை எங்ஙனம் அளவிட்டுரைப்பது? இவரது தவமகிமையை உலகம் அறிந்துய்யும் வண்ணம் அவ் அண்ணல் செய்த சூழ்ச்சியாதலால் சொல்லியபடியே இவர் செல்லத் துணிந்தார். அவ் வள்ளலைத் தம் உள்ளத்தில் சிந்தித்துக் கொண்டு தென்திசை நோக்கி வருங்கால் வழியிடையே அரியபல அற்புதங்கள் நிகழ்ந்தன. முடிவில் பொதியமலையை யடைந்து உறுதிபெற வடதிசை நோக்கி நின்றார். தாழ்ந்து குலைந்திருந்த உலகம் உடனே சமமாய் நின்றது. வருந்திநின்ற உயிர்கள் யாவும் மகிழ்ந்து திகழ்ந்தன. அமரர்முதலனைவரும் இவரது பெருமையை வியந்தார்; பெரிதும் புகழ்ந்தார்; உரிமை மீக்கூர்ந்தார்; உவந்துபோற்றினார். தவலருஞ் சிறப்போடு தென்திசை யடைந்து எல்லா உயிர்களும் இன்புற இங்கு இவர் இனிது தங்கியிருந்தமையால் தேன்முனி எனப் பெற்றார். அதன்பின் அங்குப் பரமன் திருமணம் அழகுற நன்கு முடிந்தது.

ஒத்தேறும் உவமையில்லா ஒருவன் உயர் மண முடிய உலகமெல்லாம், புத்தோகை யுடன் சிறந்து பொங்கி மணம் பெற வந்த போதனுய, இத் தேவ முனிவரனுக்கு இணையாக இசைத்திட நாம் எண்ணிநோக்கின், எத்தேவர் எம்முனிவர் எவருள்ளார் என எவரும் ஏத்தி நின்றார்.

இங்ஙனம் உலகமெலாம் தொழுதேத்த அலகில் புகழோடு நிலவி நிவந்து பொதிய மலையில் இவர் இனிதமர்ந் திருந்தார்.

பொதியம் என்பது நம்பாண்டி நாட்டின் தென்பாலு ள்ளதோர் சிறந்த மலை; இன்பநலங்கள் பல இசைந்து திகழ் வது; அலகில் பல்வளம் குலவி நிற்பது; புலவர் பலரால் போற்றப்பெற்றது. இதில் இனிய பொழில்கழும், அரிய நீர் நிலைகளும், வெள்ளிய அருவிகளும், தெள்ளிய சுனைகளும், அழகிய தழைகளும், நறுவியமலர்களும், விழுமிய கனிகளும், குழுமிய தருக்களும், எங்கணும் கெழுமியுள்ளன. இவற் றில் படிந்து இதிலிருந்துவரும் மெல்லிய காற்று நலமிக வுடையதாய் மன்பதைக்கு இன்பம் விளைக்கும் இயல்பினது. இதனையே தென்றல் என்பர். இம்மலைக்கு மலயம் என வும் ஒரு பெயருண்டு. இவர்வந் திருந்தபின் இந்திர னெய் திய அமராவதிபோல் முந்தையினும் இது சிறந்து நின்றது. இது தவநிலைக்கு ஏதுவாய தகவினை யுடையது. பவநிலை யைப் போக்கவல்லது. இதன் பெருமையைப் பல நூல்களும் மிக வியந்துபோற்றி யுள்ளன. ஈண்டுச் சிறிது காட்டுதும்.

போதியை.

பண்டாய நான்மறையும் பகர்ந்தான்செய் தவப்பேறாய்ப்
பரவை முற்றும்
உண்டானுக்கு உறைவிடமாம் ஒருமலையின் பெரும்புகழை
உணர்த்தமட்டில்

விண்டார்க்கும் கேட்டார்க்கும் விரும்பினர்க்கும் வணங்கினர்க்கும்
மேவிக் கண்ணுல்
கண்டார்க்கும் ஒருசிறிதும் கலிபுருட ஞதியர்செய்
கலக்கம் இன்றே. (க)

சித்தர்களும் நாவலரும் சென்றுகலை அரங்கேற்றும்
சீர்த்தி வாய்ந்த
முத்தமிழ்த்தாய் எனநிலவி முனிக்கோமான் தனதிடமாம்
மொய்ம்பார் குன்றை
இத்தரையின் மலைமுழுதும் எண்ணிஎண்ணி நாணும்விதம்
எழிலார் செவ்வேள்
கைத்தலத்து வேல்கருதி மற்றையர்கைப் படைகள் ஒல்கல்
கடுக்கு மன்னே. (உ)

மாதவர்சேகரன் தினமும் வாழ்தலினல், அமரர்அர
மகளிர்தம்மோ
டேதமில்மென் றளிர்த்துயில்கொள் பொழிற்செறிவால்புதன்போலும்
இயற்பா வல்லார்
போதவியக்திடும் வளத்தால், தனைத்தானே நிகர்த்திலகு
பொதியை வெற்பின்
சீதளத்தென்றலில் மதவேள் இவரானேல் ஐந்தொழிலும்
சிதைந்து போமே. (ங)

காமுகரிற் சசிபோலும், கடவுளரில் குகன்போலும்,
கவிஞர் தீஞ்சொற்
பாமுதிர்பல்கலைப்பெருக்கிற்றமிழ்போலும், கொடைநலத்தில்
பரமன் போலும்,
தீமுனை ஆயுதத் திரளில் வேல்போலும், பதாகைகளில்
சேவல் போலும்,
மாமுனிவர் குலத்தில் அகத்தியன் போலும், மலையினத்தில்
மலயம் மாதோ (ச)

(புலவர் புராணம்)

இத்தகைய பொதியமலையில் இவர் பொருந்தியிருந்த காலத்து, இலங்கையிலிருந்து தன் ஆட்சியை எங்கும் செலுத்தி நின்ற அரக்கர் வேந்தனாகிய இராவணன் புதுமையாக இவர் போந்துள்ளமையை யறிந்து ஆங்கு விமானமூர்ந்து விரைந்து வந்தான். இவரைக்கண்டான். முகமண்டலத்தில் ஞான எழில் பொலிந்து திகழ மோனமாயிருக்கும் இவரது பான்மையை நோக்கி உவந்தான்; ஆயினும் தன் மேன்மையோடு நெருங்கி வந்து "என் உத்தரவின்றி யீண்டு எவ்வாறு வந்து நீர் தங்கியிருக்கலாம்" என்று அவன் பொங்கி வினவினான். இவர் புன்னகைசெய்து அவனைப் புரிந்து நோக்கி "என் கட்டளையில்லாமல் நீ இங்கு எப்படி வரலாம்" என்று எதிர்ந்து கேட்டார். படைத்த பிரமனும் என்னோடு இப்படி எதிர்த்துப் பேசானே! யான், யார்! என்று உமக்குத் தெரியுமா? என அவன் தெளித்து நின்றான். வேதங்களை யெல்லாம் நன்கு தெளிந்த ஓர் வீரவேந்தன் என முன்னரே உன்னை யான் அறிந்துள்ளேன் என்று இவர் மொழிந்து நின்றார். உடனே அவன் மகிழ்ந்தான். இவரது உறுதியையும் பெருமிதத்தையும் நினைந்து நினைந்து வியந்தான். அவன் அங்ஙனம் வியந்து நிற்குங்கால் "சாமகானஞ்செய்து சாமியையும் நீ வசப்படுத்திய தாகக் கேள்வியுற் றிருக்கிறேன்; எங்கே அதனைக் கொஞ்சம் பாடுக பார்க்கலாம்" என்றார். இவரது கேள்வியை அறிந்து அவன் கேண்மைமீக்கூர்ந்து "உமக்கும் பாடவருமோ?" என்றான். இவர் வரும் என்றார். அதனைக் கேட்ட அளவில் அவன் அளவிலுவகை கொண்டு எங்கே பாடும் என்றான். கீதச்சுவையை நன்கு அனுபவித்துத் திளைத்துள்ளவனாதலால் இவரும் அதில் வல்லுநர் என்று தெரிந்தவுடனே விரைந்து விமானத்தி லிருந்து தன் வீணை

யையெடுத்துத்தந்து இவரைப்பாடும்படி வேண்டினன். இவர், முதலில் நீ பாடுக; அப்புறம் நான்; என்றார். அவன் அவ்வாறே முந்துறப்பாடினன். அதன்பின் இவர் யாழ்தழீஇப் பாடினர். அது பொழுது அங்கிருந்த விலங்கினங்களும், பறவைகளும், ஊர்வனவும் உள்ளங் குழைந்து அருகுவந்து சலியாது நின்றன. மரங்கள் அசையாது அடங்கின. எதிரிலிருந்த ஓர் மணிக்கற்பாறை உருகி நின்றது.

"தருக்களும்சலியா; முந்நீர்ச் சலதியும்கலியா; நீண்ட
பொருப்பிழி யருவிக்காலு நதிகளும் புரண்டுதுள்ளா;
அருட்கடல் விளைத்தகீத இன்னிசை யமுதமாந்தி
மருட்கெட அறிவன்திட்டி வைத்தசித் திரமேயொத்த.

வன்றரை கிழிய வீழ்போய் வான்சினை கரிந்துநின்ற
ஒன்றறி மரங்களெல்லாம் செவியறி வுடையவாகி
மென்றளி ரீன்று, போது விரிந்து, கண்ணீரும் சோர
நன்றறி மாந்தர்போல நகைமுக மலர்ந்த மாதோ.

பைத்தலை விடவாய்நாகம் பல்பொறி மஞ்ஞைநால்வாய்
மத்தமா னரிமான்புல்வாய் வல்லிய மருட்கையெய்தித்
தத்தமா றறியாவாகித் தலைத்தலை மயங்கிச்சோர
இத்தகைமாவும் புள்ளும் இசைவலைப் பட்டவம்மா!"

என்றபடியே அன்றிவர் இசையில் உயிர்கள் உருகிநின்றன. அயலொன்றையும் அறியாமல் கண்ணீர்மல்கி இராவணன் பரவசமா யிருந்தான். பின்பு பெருமகிழ்வோ டெழுந்தான். இவரை உவந்து பணிந்தான். "என் னுயிரினும் இனிய இசைஞானியே உமக்கு என்ன வேண்டும்" என்றான். இன்றுமுதல் இப்பக்கங்களில் வந்து எவர்க்கும் இடரிழைக்காமல் இருக்கவேண்டும் என்றார்; அவன் இசைந்து போற்றினன்; மீண்டும்பணிந்து உறவுடையனய் எழுந்து போயினன். அதுமுதல் அரக்கர் பயமின்றி மக்கள் மகிழ்ச்சியுற்

திருந்தார். அமரர்கோன் முதலாக எவரும் அஞ்சுதற் குரிய அரிய போர்வீரனாகிய அக்கொடியவேந்தனைத் தமது இனிய கானத்தால் பிணித்து உரிமையாளனாக்கி உயிர்களுக்கு ஊறு செய்யாவண்ணம் உறுதி செய்து விடுத்து இந்நாட்டைப் பேரருளோடு பேணி நின்ற இப் பெருந்தகையை அக்காலத்திருந்தவரெல்லாரும் இறைஞ்சி யேத்தினர். இவர் செய்த நன்றியை நினைந்து பிற்காலத்தவரும் பேரன்போடு புகழ்ந்து போற்றினர். நம்மைக் காக்கவந்த கடவுளே என்று மக்களனைவரும் உளங்கனிந்து நாளும் இவரை வணங்கி நின்றார். இவர் இங்ஙனம் இருந்து காத்த வுண்மையைக் குறித்துப் பல நூல்களும் புகழ்ந்து கூறியுள்ளன. சில ஈண்டுத் தந்து காட்டுதும்.

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுள்" என்பது (மதுரைக்காஞ்சி)

இதற்கு நச்சினார்க்கினியர் உரைகூறுங்கால் "இராவணனைத்தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன்" என்றது காண்க.

தென்னவன் = இராவணன். தென் திசையிலிருந்து ஆட்சி செய்தவன் என்றவாறு.

"மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர் பொதியிற் பொருப்பன்"
(சிலப்பதிகாரம்)

இதற்கு அடியார்க்குநல்லார் உரை கூறுங்கால் "முதிய மறையை யுண்டாக்கிய பிரமன் பின்னோனாகிய குறுமுனி" என முதலடிக்குப் பொருள் கூறியிருத்தல் காண்க.

"பன்னிருவ ராதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப

மன்னும் அகத்தியன் யாழ் வாசிப்ப"
(திருக்கைலாய ஞானவுலா)

"இனிய பைந்தமிழின் போதியமால் வரைபோல் இசைக்குஉருகாது, இமயமலையின்
தனையையின் தீஞ்சொற்கு உருகுறுஞ் சோணசைலனே கைலை நாயகனே" (சோணசைலமாலை)

"அன்னு ளிருப்ப அவள்பாங்கி சென்று, மலை
முன்னாள் உருக்கும் முனிநிகர்வை" (திருவெங்கையுலா)

"இராவணனைப் பிணிக்கக் குறுமுனி பாடும் இசைக்கு
உருகிய பொதியின் மலை" (தஞ்சைவாணன்கோவையுரை.)

"பொதியின் கண் இருந்து இராவணனைக் காந்தருவத்
தால்பிணித்து, இராக்கதரை ஆண்டுஇயங்காமை விலக்கி"
(தொல்காப்பியப் பாயிரவுரை.)

நம்முனிவர்பெருமான் மூவுலகிற்கும் தனிநாயகனாய் நின்ற இராவணனை இசையால் வென்று இந்நிலத்துக்கு இனிமை செய்த உண்மையை மேற்குறித்த நூல்கள் விளக்கி நிற்பன காண்க. சேரமான் பெருமான், இளங்கோவடிகள், இளம்பூரணர், மாங்குடி மருதனார், சிவப்பிரகாசர் முதலிய பெரியாரெல்லாரும் இவர் இசைமை செய்து இந்நிலம் நலமுறப் பொதியிலின்கண் இனிதிருந்தமையை நினைந்து மனமகிழ்ந்து கூறியுள்ளார்.

பல்கலைக் குரிசிலாய் நல்லிசைபரப்பி இங்ஙனம் இவர் நண்ணியிருக்குங்கால் பல திசைகளிலுமிருந்து நாளும் அறிஞர்பலர் குழுமி வந்து இவரைத் தொழுதுசென்றார். சிலர் ஆண்டுத் தங்கி அடிபணிந்து நின்று அருங்கலை பயின்றார். அங்ஙனம் அமர்ந்து பயின்றவர்களுக்குள் பன்னிருவரே இயற் புலமையில் மிகச் சிறந்து விளங்கினார். அவராவார்

1. தொல்காப்பியர்
2. அதங்கோட்டாசான்
3. துராலிங்கர்
4. செம்பூட்சேய்
5. வையாபிகர்
6. வாய்ப்பியர்
7. பனம்பாரர்
8. கழாரம்பர்
9. அவிநயர்
10. காக்கைபாடினியார்
11. நற்றத்தர்
12. வாமனர்

என்னும் நாமங்களோடு வயங்கி யுள்ளார். இவர் இலக்கணப் பயிற்சியாளர். கந்தருவ வேதமாகிய இசை, ஆயுள் வேதமாகிய மருத்துவம் முதலிய கலைகளையும் சிகண்டி முதலிய பல முனிவர்கள் இவர்பால் பயின்றுபோயுள்ளார்.

இப்பன்னிருவருள்ளும் தொல்காப்பியரே எல்லாவகையிலும் வல்லவரா யிலங்கி நின்றார். ஒல்காப்புகழோடு உயர்ந்து திகழ்ந்த அவர், உலகம் இன்புற ஓர் அரிய இலக்கண நூலை அருளிச் செய்தார். அது, அவர்பெயரால் தொல்காப்பியம் என வழங்கப்படுகின்றது. புலவருலகிற்கு ஓர் இலகொளி ஞாயிறாய் என்றும் ஒளிவீசி அஃது நின்று நிலவுகின்றது. பள்ளித்தோழராய் அவருடனிருந்து பயின்ற மற்றவரும் தத்தமக்கியன்றவாறு தனித்தனியே நூல்கள் செய்தனர் அவ் வெல்லா வற்றுள்ளும் இத் தொல்காப்பியமே பல்கதிர்பரப்பி அறிவுப்பிழம்பா யமைந்துள்ளது. உலகு

உயிர்களின் நிலையியல்களெல்லாவற்றையும் மலைவற விளக்கித் தெளிவுற நிற்கும் இவ்விழுமிய நூலை அவர், இம்முனிவர் பெருமான் அருளியிருந்த அகத்தியம் என்னும் உயர் நூலையேமுதனிலையாக் கொண்டு சின்னாட் பல்பிணிச் சிற்றறிவின ர்க்கு இதமுற வழியமையச் செய்தார்.

"வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்து
நல்லிசை நிறுத்த தொல்காப் பியன்"

(பன்னிருபடலம்.)

இதில் மேற்குறித்த உண்மை விளங்கிநிற்றல் காண்க. இவர் தமிழ்மொழி விளங்கவந்த தவ ஒளியார் எனவும், தேவரும் போற்றும் மேவரும் பெருமையுடையார் எனவும், இதுபொழுது விளங்கும் தொல்காப்பியத்துக்கு இவரருளிய அகத்தியமே முதனூல் எனவும் பிறவும் இதனால் இனிதுணரலாகும்.

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப்பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்."

(புறப்பொருள்)

இவரது சிறப்பு, இருப்பு, பன்னிருவருக்கும் இன்னரு

ள்செய்து பயிற்றிவந்த பான்மை, மேன்மை முதலியன இதன் கண்ணும் உணர்த்தப்பட்டிருத்தல் காண்க.

உணர்வொளி பரப்பி இங்ஙனம் இவர் இருந்த காலத்திற்கு மிக முன்னதாகத் தென்மதுரையில் தமிழ்ச் சங்கம் நிலவியிருந்தது. தென்மதுரை என்பது இதுபொழுதுள்ள தென் எல்லையின் கடற்கரையாகிய குமரிக் கோட்டிலிருந்து சற்றேறக்குறைய நூறு காவத தூரம் தெற்கேயிருந்த ஓர் அழகிய பெரிய நகரம். அதிலிருந்து தான் பாண்டிய மன்னர்கள் பண்டு தொட்டு வழி வழியாக அமர்ந்து முதலில் அரசு புரிந்து வந்தனர். அம்மன்னர் பெருமக்கள் தம் தாய் மொழியாகிய தமிழ்மொழியையினிது பாதுகாக்கும் பொருட்டுப் புலவர்களைத் தொகுத்து அதில் ஓர் சங்கம் நிறுவினர். அது, நாலாயிரத்துநானூற்று நாற்பது 4440 யாண்டுகளாக நன்கு நடைபெற்று வந்தது. அதில் இவரைத் தலைவராய் இருக்கும்படி பரமனும் அறுமுகப் பெருமானும் அருள்புரிந்து பணித்தார். அப்பெருமான்கள் பேரருளைச் சிரமேற் கொண்டு இவர் அங்கு முதல்வராய்வீற்றிருந்து தமிழாராய்ந்துவந்தார். தமிழ் ஆராய்தல் என்பது உயிர்களின் உணர்விற்கு ஒளியாயுள்ள மொழிகளில் வழுவு நிகழா வண்ணம் பாது காத்தல். இதுபொழுதுள்ள பாதுகாப்பையும் இங்குச் சிறிது நின்று சிந்தித்துக் கொள்க. தமது தவ மகிமை யாலும் காய சித்தியாலும் இடை யிடையே அங்கு விரைவில் சென்று பாண்டிய மன்னர்க்கு வேண்டிய நீதிகள் கூறி ஆண்டு உமர்ந்திருந்த ஐந்நூற்று நாற்பத் தொன்பது புலவர்களுக்கும் அறிவுநலங் கொளுத்திச் சங்கத்தைப் பெரிதும் கண்ணூன்றிப் பேணி வருமாறு பணித்துத் தவத்தையும் தமி

மையுந்தாழாது இவர் வளர்த்துவந்தார். அங்ஙனம்வருங்கால் ஒருநாள் கடல் பொங்கி யெழுந்து அந்நிலத்தைக் கவர்ந்து கொண்டது. நாற்பத்தொன்பது நாடுகளைத் தனக்குள் கிளைகளாகக் கொண்டிருந்த அந்நிலமுழுவதும் கடலுள் மூழ்கி அழிந்தது. அதன் பின்பு வினைவழி உலகம் நிலைபெறும் என்று இவர் தம் தவ வழியிலிருந்தார். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வெண்டேர்ச் செழியன் என்னும் பாண்டியமன்னன் தோன்றி மீண்டும் ஓர் நகரத்தைப் படைத்து ஆண்டு வாழ்ந்து வந்தான். வருங்கால் மறுபடியும் ஓர் சங்கத்தை நிறுவி அதில் வந்து வீற்றிருக்கும்படி இவரை வேண்டி யழைத்தான். இவர் அருள் சுரந்து அவன் வேண்டுகோளுக் கிசைந்து அவ்வாறே அங்கு மேவி யிருந்தார் கபாடபுரம் எனப்பெயரிய அப் புதிய நகரில் நிறுவப்பட்ட இரண்டாம் சங்கத்தில் சிறு பாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை, வெள்ளூர்க் காப்பியன் என இவர் முதலான ஐம்பத்தொன்பது புலவர்கள் அமர்ந்திருந்தார். அவரனைவரும் இவரது அருள்வழியொழுகித் தமிழினை ஆராய்ந்து வந்தார். அது மூவாயிரத்தெழுநூறு 3700 ஆண்டுகள் நடைபெற்று வந்தது. பின்னர் ஒருமுறை அந்நகரமும் அதனைச் சூழ்ந்திருந்த நாடுகளும் கடல்வாய்ப்பட் டழிந்துபோயின. போகவே நீண்டகாலமாக யாண்டும் இயங்காமல் தாம் வேண்டிய மலையில் மேவி யோகநிலையில் இவர் அமர்ந்திருந்தார். நெடுங்காலத்துக்குப் பின்னர் அஃதாவது இற்றைக்கு மூவாயிரத்தறுநூறு ஆண்டுகட்குமுன்னர் முடத்திரு மாறன் என்னும் பாண்டிய மன்னன் தோன்றி இப்பொழுதுள்ள மதுரையி லமர்ந்து தனது மரபின்முறைப்படி ஓர் சங்கம் நிறுவித் தமிழை வளர்த்தான். அவ் வேந்தனும் இம்முனிவர் அடியைப் பணி

ந்து, இனிய நீதிகள் பல தெளிந்து, உயிர்களின்புறத் தமிழையும் அரசையும் நன்கு பாதுகாத்து வந்தான். இம் மூன்றும் சங்கம் ஆயிரத்தெண்ணூற்றைம்பது(1850)ஆண்டுகளாக நன்கு நடைபெற்று வந்தது. அச்சங்கத்தில் நாற்பத்தொன்பது புலவர்கள் அங்கத்தவரா யிருந்து தமிழை ஆராய்ந்து வந்தார். அவரனைவரும் இவரருள்வழி ஒழுகித் தெருளடைந்து திகழ்ந்தார்.

முதல் இடை கடை என்னும் மூன்று சங்கங்களிலும் இவர் அமர்ந்து அருங்கலை விநோதராய் விளங்கி யிருந்தார். இவரது உணர் வொளியால் நுண்மாண் நுழைபுல முடையராய்ப் பன்மாண் குணங்களும் அமைந்து, தண்ணளி நிறைந்து, விண்ணவரும் புகழ எண்ணரிய புலவர்கள் நண்ணியிருந்தார். அவ்வக்காலத்து அவர்கள் பாடியுள்ள நூல்கள் பல. அவற்றுட் சில பெருங்குருகு, சிறுகுருகு, வெண்டாளி, வியாழமாலை, களரியாவிரை, செயிற்றியம், பரதம் என்பன போலக் கேட்கப்படுவனவே யன்றி இக்காலத்தில் அவைகாணப்படுவன வல்ல. மேற்குறித்த சங்கங்களின் நிலைமையையும், எங்கும் பொங்கொளி பரப்பி இஞ்ஞானபானு அங்குத் தங்கியிருந்த தலைமையையும் பல நூல்கள் வியந்து கூறியுள்ளன. அடியில் வரும் பழையபாடல் ஒன்றிலும் இவை இனிதுணரலாகும் அது வருமாறு காண்க:

### க. முதற்சங்கம்.

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவத்
திந்நான் கெல்லையின் இருந்தமிழ் பயின்ற
செந்நாப் புலவர் செய்திநீண் டுரைப்பின்
ஆடகக் குடுமி மாடக் கூடலின்

முன்னர்ச் சங்கக் கனமாப் பலகையில்
திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்,
மன்றல் மராத்தார்க் குன்றெறி இளஞ்சேய்,
திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி
புவிபுகழ் மருதங் கவினிய முரிஞ்சிப்
பதிமுடி நாகன், நிதியின் கிழவன்,
இனையர் ஐந்நூற்று நாற்பத்தொன் பதின்மர்;
அனையர் நானுன் காயிர நூற்றொடு
நாற்பத்தொன் பதின்மர் பார்க்கிற்செந் தமிழோர்
புரிந்தன செய்யுட் பெரும்பரி பாடலும்,
முதுமை யடுத்த நாரையும், குருகும்,
கதியுறச் செய்த களரியா விரையும்,
ஆங்கவர் இருந்ததும் அத்தொகை யாகும்;
ஈங்கிவர் தம்மை இரீஇய பாண்டியர்கள்
காய்சின வழுதிமுதல் கடுங்கோன் ஈறா
எசிலாவகை எண்பத்தொன் பதின்மர்;
கவியரங் கேறினர் எழுவ ராகும்;
மகத்துவ முடைய அகத்தியம் இலக்கணம்;

௨. இடைச்சங்கம்

வடுவறு காட்சி நடுவட் சங்கத்து
அகத்தியர்; தொல்காப்பியத் தமிழ் முனிவர்,
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்,
எள்ளாப் புலமை வெள்ளூர்க் காப்பியன்,
இறவா இசையிற் சிறுபாண்ட ரங்கன்,
தேசிக மதுரையா சிரியன், மாறன்,
தவரொப் பாய துவரைக் கோமான்,
தேருங் கவிபுனை கீரந்தையர், இவர்

ஒன்பதோ டடுத்த ஐம்பதின்ம ராகும்;
தவலருங் கேள்வித் தன்மையருள் ளிட்டு
இவர் மூவாயிரத் தெழுநூற் றுவரே;
வையகம் பரவச் செய்த செய்யுளும்
இருங்கலி கடிந்த பெருங்கலித் தொகையொடு
குருகு, வெண்டாளி, தெருள்வியாழ மாலை,
அந்நாள் இலக்கணம் அகத்தியம்; அதனொடு
பின்னைச்செய்த பிறங்குதொல் காப்பியம்,
மதிநலங் கவின்ற மாபுராணம்,
புதுநலங் கனிந்த பூத புராணம்,
வல்லிதினுணர்ந்த நல்இசை நுணுக்கமும்,
தாவாக் காலம் தமிழ்பயின் றதுவும்
மூவா யிரத்தோ டெழுநூற்றி யாண்டு;
பரீஇய சங்கம் இரீஇய பாண்டியர்கள்
வெண்டேர்ச் செழியன் முதலா விறல்கெழு
திண்டேர்க் கொற்ற முடத்திரு மாறன்
முரசுடைத் தானை மூவா வந்தம்
அரசுநிலை யிட்டோர் ஐம்பத்தொன் பதின்மர்;
இவ்வகை அரசரிற் கவியரங் கேறினர்
ஐவகை அரசர்; ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேதகு கீர்த்திக்
கண்ணகன் பரப்பிற் கபாடபுரம் என்ப;

௩. கடைச்சங்கம்

பருங்கடைச் சங்கம் இருந்தோர்யார்? எனின்,
சிறுமே தாவியார், சேந்தம் பூதனார்,
அறிவுடை யரனார், பெருங்குன்றூர் கிழார்,
பாடல் சான்ற இளந்திரு மாறன்,
கூடலா சிரியர், நல்லந்துவனார்,

பரவு தமிழ் மதுரை மருதனிளநாகர்,
அவிர்கணக் காயர், நவில்நக் கீரர்,
கீரங் கொற்றர், கிளர்தே னூர்கிழார்,
ஒருங் கலைமண லூராசிரியர்,
நல்லூர்ப் புளியங் காய்ப்பெருஞ் சேந்தர்,
செல்லூ ராசிரியர், முண்டம் பெருங்குமரர்,
முசுறி யாசிரியர், நீலகண்டனார்,
அசைவிரி குன்றத் தாசிரியர், அன்றி
நாத்தலங் கனிக்குஞ் சீத்தலைச் சாத்தர்,
முப்பாலுணரும் உப்பூரி குடிகிழார்,
உருத்திர சன்மர், மருத்துவ ராகிய
நாம நாற்கலைத் தாமோ தரனார்,
மாதவள னாரோ டோதுமிள நாகர்,
கடியுங் காமப் படியங் கொற்றனார்,
அருஞ்செயி லூர்வாழ் பெருஞ்சுவ னாருடன்
புவிபுகழ் புலமைக் கபிலர், பரணர்,
இன்னாத் தடிந்த நன்னாகர், அன்றியும்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்துக்கு
உரையிடை யிட்ட விரகர்கல் லாடர்,
பேர்மூல முணரும் மாமூலர், தம்மொடு
விச்சை கற்றிடு நச்சென்னையார், முதல்
தேனூற் றெடுப்பச் செந்தமிழ் பகர்ந்தோர்
நானூற் றுவர்முதல் நாற்பத்தொன் பதின்மர்;
பீடுபெற வுலகிற் பாடிய செய்யுள்
முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை,
அகநானூறு, புறநானூறு,
குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, வரியோ
டறம்புகல் பதிற்றுப்பத்து, ஐம்பதோடிருபான்

பெறும்பரி பாடலும், குறுங்கலி நூற்றைம்
பதுமுதல் ஆகிய நவையறுங் கலைகள்;
அக்காலத்தவர்க்கு அகத்தியம், அதனொடு
மிக்கா மிலக்கணம் விளங்கு தொல்காப்பியம்;
எண்ணூற் கேள்வியர் இருந்த தாயிரத்
தெண்ணூற் றைம்பது வருடம் என்ப;
இடர்ப்படா இவர்களைச் சங்கம் இரீஇயினோர்
முடத்திரு மாறன் முதலா உக்கிரப்
பெருவழுதியீறாப் பிறங்கு பாண்டியர்கள்
நரபதிகளாகு நாற்பத்தொன் பதின்மர்;
இவருட் கவியரங் கேறினர் மூவர்;
புவியிற் சங்கம் புகழ்வட மதுரை;
ஆதிமுச் சங்கத் தருந்தமிழ்க் கவிஞர்
ஓதிய செய்யுள் உலவாப் பெரும்பொருள்
வாளாக் கேட்கும் தோளாச் செவிக்கும்,
கேட்டுந் தெரியா ஓட்டை நெஞ்சினுக்கும்,
நுழையா; அதனின், நுழைபுலன் தன்னொடும்
விழைவார்க்கு உரைக்க வேண்டுவர் தெரிந்தே."

மேற்குறித்த முச்சங்கங்களின் வரலாறுகளும், அவை நிலைபெற்றிருந்த கால அளவுகளும், அவற்றை நிறுவி ஆதரித்து வந்த பாண்டியர்களின் ஆண்டகைமைகளும், அவற்றின்கண் இருந்து தமிழை ஆராய்ந்து வந்த புலவர்களின் நிலைமைகளும், அவரருள்வழி வெளிவந்த நூல்களும், அப்புலவர் பெருமக்களெல்லாருக்கும் தலைவராய் நின்று உணர்வொளி பரப்பி இம்முனிவர்பெருமான் அருள்புரிந்து நிலவியிருந்த தன்மையும், பிறவும் இதன்கண் ஒளிர்வனகாண்க.

முதல் இரண்டு சங்கங்களும் கடல் கொண்டொழிந்த பின் நெடுங்காலமாக இடைகுன்றியிருந்த வழுதிமரபு மீண்

டுங் கிளைத்து இவரருள்வழி ஒழுகிப் பெரும்புகழெய்தி உலக முழுவதையும் பொதுவற ஆண்டது. அம்மரபில் தோன்றிய மன்னரனைவரும் வழிவழியாக இவரைக் குலகுருவாகக் கொண்டு முறைசெய்து வந்தனராதலால் அவர்க்கு வேண்டிய நலங்களை இவர் விழைந்து செய்துவந்தார். அதனால் இப் பாண்டி நாடு ஈண்டிய திருவோடெழுந்து திகழ்ந்தது. அமிழ் தறழ்தமிழும், அறிவுயர் புலவரும், விழுமிய சங்கமும, குழுமிய அங்கமும், மணிமுடி மன்னரும், அணிவரு பின்னரும் இனிது விளங்க இவர் விளங்கியிருந்தமையால் இத்தென்னாடு பொன்னாடென எங்கணும் வளங்கள் பொங்கியிருந்தன.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தரபாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப்புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநாடு"

என இந்நாட்டைக் குறித்துப் போற்றுவாரெல்லாரும் இவரை முன்னுற வைத்து ஏத்துவாராயினர். இவரருள்மாட்சியால் பிறநாட்டுள்ளும் அம்மன்னர் ஆட்சி பெருகிநின்றது.

## கடல்கோளின்காரணம்.

சயமாகீர்த்தி என்னும் மன்னனுக்குப் பதினேழுதலை முறைக்கு முன்னிருந்த ஓர் பாண்டியன் ஒருமுறை கடலை அவமதித்துத் தனது காலால் மிதித்து வேலால் எறிந்தான். அங்ஙனம் எறிதற்குக் காரணம் கடலரசனாகிய வருணன் தன்மீது பகைசெய்திருந்தமையேயாம். அச் செற்றத்தை நினைந்து காலகதியை அவன் கருதியிருந்தான். அதுவாய்த்தபோது அவன் ஏவலால் கடல் சீர்த்தெழுந்து அம்மன்னவன் மரபினராண்டுவந்த தென்னாட்டைமேற்குறித்தபடி இரு

முறை கவர்ந்து கொண்டது. அதனால் காடும் மலையும் நாடும் நகரமும் ஆறும் பிறவும் நீராயொழிந்தன. அந்நாட்டின் வட வெல்லையாயிருந்த பஃறுளி ஆறும் அதனோடு உடன் ஒழிந்தது. அது, அகன்று பரந்து சிறந்து விளங்கியிருந்தது அஃதழிந்து போகவே பின்பாலவர் அதன் வடபால் வந்து ஆட்சி செய்து இம்முனி புங்கவரது அருள்வலியால் இமயம் வரையும் தமது ஆணையை இனிது செலுத்தினர். இவ்வுண்மையை அடியில் வருவனவற்றின்கண் சிறிதுகாணலாம்.

"அடியில் தன்னளவு அரசர்க்குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"

(சிலப்பதிகாரம்.)

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்.

(கலித்தொகை.)

விரிந்து பரந்து மிகுந்த வளங்களோடு அகன்று கிடந்த தென்புலத்தைக் கடல் கவர்ந்து கொண்டதும், அதன்பின் கிளர்ந்தெழுந்த அவ்வழுதியர் இவரருள்வழி நின்று வடதிசை முழுவதும் வளைந்தாண்டதும், அவர்களுக்கு உறுதிசெய்து இவர் இனிதிருந்ததும் பலநூல்களிலும்குறிக்கப்பட்டுள்ளன.

இன்னவாறு அம்மன்னவர்முதல் பின்னவரெவரும் இவரின்னருளால் முன்னிய நலங்களைஎய்தி மன்னியிருந்தனர்.

ஆன்றோர் பலர்க்கும் அறிவூட்டி வான்றோய் புகழோடு இங்ஙனம் மருவி நின்ற இவர், தென்மதுரை, மகேந்திரமலை, கபாடபுரம், பொதியமலை, தண்டகவனம், விந்தம், தமனியம், ஏமகூடம், காசி, நைமிசம், கயா, இமயம் என்னும் இப்பன்னிரண்டிடங்களிலும் காலந்தோறும் கலந்தினிதிருந்தார். இவ் இனிய இடங்கள் எல்லாவற்றுள்ளும் பொதியமலையே இவர்க்குமிகவும் உரிமையாயிருந்தது. அதனால் பொதிய முனிவன், மலயமாதவன் என இவர் பெயர்பெற்று நின்றார். சானகியைத் தேடி வரும்படி வானரங்களுக்குக் கூறி விடுங்கால் சுக்கிரீவன் இவரை மிக வியந்து குறித்து விடுத்துளான். அன்று அவன் கூறியபடியை அடியில் காண்க.

தென்தமிழ்நாட் டகன் பொதியிற் றிருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்றுமவன் உறைவிடமாம் ஆதலினால் அம்மலையை இறைஞ்சி யேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனும் திருநதிபின் பொழிய நாகக்
கன்று வளர் தடஞ்சாரல் மகேந்திரமா நெடுவரையுங் கடலுங் காண்டிர். (இராமாயணம்.)

முனிவன் சங்கம் சேர்கிற்பீரேல் இறைஞ்சி ஏகுமின் என்ற இதனால் அக்காலத்தவர் இம்மூர்த்திபால் கொண்டிருந்த அன்பும் பணிவும் அறியலாகும். இவர் இருந்த இடமெல்லாம் தமிழ்ப் புலமை மிக்க முனிவர்குழாம் அமர்ந்திருந்த வுண்மையையும், இவரது சிறந்த தன்மையையும் இதுவிளக்கி நிற்றல் காண்க. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எழுந்தருளியிருந்த முனிவர் இருப்பினை வானர மன்னன் வாயிலாகக் கம்பர் உணர்த்தியிருக்கும் அருமை யீண்டு ஊன்றியுணரத்தக்கது. இப்பெருமானுக்கு இருப்பிடமாயிருத்தலினால்

பொதியமலையை ஞானநிலையமென வானவரும் வணங்கிநின்று வழுத்தி யேத்துகின்றனர். இவர் சார்ந்திருந்த பின் தண்டகவனம் விண்டலமும் புகழ விளங்கி யிருந்தது.

## தண்டகம்

இவர் தண்டகவனத்தின் இடையிலிருந்த பொழுது தான் இராமர் முதன்முதல் இவரை வந்து கண்டது. அவ் வீரமூர்த்தி இஞ் ஞானமூர்த்தியைப் பார்த்த பின்பு அரியபல சீர்த்திகளை யடைந்து விளங்கினர். தம் மனைவியையும் தம்பியையும் உடன் அழைத்துக் கொண்டு அவ் வள்ளல் வனம் புகுந்து வாலகில்லியர் முதலிய முனிவர்களைக் கண்டு இனிய விரைகளாடி ஆண்டுச் சிலகாலந் தங்கி யிருந்து அவர்கட்கு வேண்டிய ஆதரவுகளைச் செய்து பின்பு சுதீக்கணரை வந்து கண்டார். அவர் ஐம்பொறி யடக்கிய அருந்தவ முனிவர். உம்பரும் புகழும் உயரியல்புடையவர்.

"சுடருருமேனிச் சுதீக்கணன் என்னுமவ்
இடருலாவுறை சோலைசென் றெய்தினர்" (இராமாயணம்)

என்றபடி எய்திப் பணிந்தபொழுது அவர் அகமகிழ்ந்து தழுவினர். தம்மிடம் சிலகாலம் விருந்தினராய்த் தங்கி யிருக்கும்படி இராமரை அவர் மிக விரும்பி வேண்டினர்.

"அன்றுமுதல் இன்றுவரை யான்புரிந்த தவமெல்லாம்
அரசே பேணி, பின்னுனக்குத் தக்கணையாத் தந்துநின்றேன்
இருந்தருள்க விருந்தாக வந்தால்!" என்று அவர் விழைந்து மொழிந்தார். அவர் அருள் மொழிகளைக் கேட்டு அவ் அண்ணல் [illegible] ஐயனே! என் உள்ளம் அகத்தியரைக்

காணவேண்டு மென்று அவாவி நிற்கின்றது; என்னை அங்கு அருள்புரிந்தனுப்ப வேண்டுமென மிக வணங்கி வேண்டினார். உடனே அவர் உவந்து சொல்லிய படியை அடியில் காண்க.

"நல்லதே நினைந்தாய்; அது நானுமுன்
சொல்லுவான் துணிகின்றது; தோன்றல்! நீ
செல்லு காண்டவற் சேருதி; சேர்ந்தபின்
இல்லை நின்வயின் எய்தவில் லாதவே."

என்று சொல்லிவிடுத்தார். "செல்லுக; ஆண்டு அவரைச் சேருதி; சேர்ந்தால் நீ அடைதற்கரிய தொன்றில்லையாம்; எல்லாநலங்களும் ஒருங்கே எய்தி உயர்ந்து திகழ்வாய்" என இராமரைப் பார்த்து அவர் சொல்லியுள்ள இதனால் முனிவர் குழாங்கள் இப்புனிதரை மதித்திருந்த மாட்சி இனிதுணரலாகும். அவரிடம் விடைபெற்றுச் சென்று இவர் தவச்சாலையிருந்த மலர்ச்சோலையை அம்மன்னர் அணுகினர். அவரது வரவினை யறிந்து இவ் வரமுனிவர் பெருமகிழ்வடைந்தார். எதிர்கொண்டெழுந்தார். அவ்வமயம் அறிஞர்பெருமானாகிய இவரைக் குறித்துக் கவிஞர் பெருமானாகிய கம்பர் கூறியுள்ள அருமைப்பாடல்கள் ஈண்டு அறிதற்குரியன. அவற்றுள் சிலகாட்டுதும். பொருளைக் கருத்தூன்றிக் காண்க.

### அகத்தியர் எதிர்வந்தது.

ஆண்டகையர் அவ்வயின் அடைந்தமை யறிந்தான்
ஈண்டுவகை வேலைதுணை எழுலக மெய்த
மாண்ட வரதன்சரண் வழங்க எதிர் வந்தான்
நீண்டதமிழால் உலகை நேமியின் அளந்தான். (க)

### கடல்குடித்தது.

பண்டவுணர் சூழ்கினர் படார்களென வானோர்
எண்டவ! எமக்கருள் கெனக் குறையிரந்தார்
கண்டோருகை வாரினன் முகந்துகடல் எல்லாம்
உண்டவர்கள் பின்னுமிழ்க என்றலும் உமிழ்ந்தான்.

### மாயாவி இல்வலனை வதைத்தது.

தூயகடல் நீர்அடிசில் உண்டது தரந்தான்
ஆயவதலால் அமருமெய்புடைய அன்னான்
மாயவினை வாளவுணன் மாயஅவன் வன்மைக்
காயமினி துண்டுலகின் ஆரிடர்களைந்தான். (௩)

### விந்தமடக்கியது.

யோகமுறு பேருயிர்கள் தாம்உலை வுறாமல்
ஏகுநெறி யாதென மிதித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய்
நாகமது, நாகமுற நாகமென நின்றான். (௪)

### உலகை நிலை நிறுத்தியது.

மூசரவு சூடுமுத லோனுரையின் மூவா
மாகில்தவ! ஏகென வடாதுதிசை மேனாள்
நீசமுற வாணினொடு மாமலய நேரா
ஈசனிக ராயுலகு சீர்பெற இருந்தான். (௫)

### தமிழை வளர்த்தது.

உழக்குமறை நாவினும் உயர்ந்தலக மோதும்
வழக்கினும், மதிக்கவியினும், மரபினடி

நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.

கண்டனன் இராமனை வரக்கருணை கூரப்
புண்டரிக வாணயனம் நீர்பொழிய நின்றான்
எண்டிசையும், ஏழுலகும், எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்தான்.(எ)

அடிதொழுத இராமனைத் தழுவிநின்றது.

நின்றவனை வந்தநெடி யோன்அடி பணிந்தான்
அன்றவனும் அன்பொடு தழீஇ அழுதகண்ணான்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான். (அ)
(இராமாயணம்.)

இவரது அருமையும், செயற்கரியன எல்லாம் செய்து முடித்தபெருமையும், உலகமுய்ய உதவிநிற்கும் உரிமையும், பிறவும் இதன்கண் ஒளிர்வன காண்க. இராமரைத் தழுவிக் கொண்டுபோய்த் தம் தவச்சாலையில் இருத்தி அறிவுரைகள் பலகூறி இவர் இனிதுபசரித்தார். "என் இல்லின்கண் வந்து நீ விருந்தினனாயிருந்தது யான்செய்த அருந்தவத்தின் பெரும்பயனே" என்று இவர் உவந்துரைத்தார். அவ்வுரையைக் கேட்டபொழுது அவர் உள்ளமுருகினர்; தமது செந்தாமரைக் கண்களினின்று வெள்ளம் பெருகமெய்ம்மயிர் சிலிர்த்தார்; வள்ளலே! என வணங்கி மொழிந்தார். அவ்வாறு வணங்கித் தொழுதபடியை அடியில் காண்க.

"என்றமுனி யைத்தொழுது இராமன் இமையோரும்,
நின்றதவ முற்று நெடியோரின் நெடியோரும்,
உன்றனருள் பெற்றிலர்கள்; உன்னருள் சுமந்தேன்
வென்றனென் அனைத்துலகும் மேவினிதி னென்றான்"

"அமரருக்கும், அரிய தவமுடைய பிறரெவர்க்கும் கிடையாத அருமை பேறருளை இன்று யான் பெற்றேன்; இனி எனக்கு அரியது யாது? உலக முழுவதையும் வென்றே உயர்ந்தேன்;" என அவ்வீரச் சிங்கம் இவ்வரைக் கண்டதால் உண்டான நலங்களை வியந்து மனங் கனிந்து மகிழ்ந்து கொண்டாடியிருக்கும் அருமையை இதில் உன்னி யுணர்க.

"அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம்பூணச் செந்நெறி செலுத்தித்தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத் தேக வீண்டு
பிறந்தனன் தன்பொற் பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்"

என்றபடி பிறந்துநின்ற அச்சிறந்த நாதனே இவர் காட்சியாலடைந்த சிறப்பினை நினைந்து இங்ஙனங் களித்துத் துதித்துள்ளார் என்றால் இவர் மாட்சியை அளந்தறிந்து எவர் சொல்லவல்லார்! இங்ஙனம் உள்ளமகிழ்ந்து புகழ்ந்துநின்ற அவ் அருந்திறலாளனை இப் பெருந்தகையாளர் பேணி யுபசரித்தார்; திருமால் முன்பு தம்மிடத்தில் தந்து வைத்திருந்த அரிய வில்லையும், கடியவம்புகளையும், நெடியவாளையும் பின்பு அவருக்கு ஆதரித்துக் கொடுத்து இவர் ஆசி கூறி விடுத்தார். அவர் அடுத்துத் தென்திசை போந்து அமர்ந்திருந்தபோது, கடுத்து வந்து பொருத கரதூடணன் முதலிய கொடியோரைக் கொல்லுங்கால் இவர் கொடுத்த

வில்லின் கொற்றத்தைக் கண்டு, பெற்ற பேற்றை மகிழ்ந்து உற்ற தம்பி யிடம் உவந்து சொல்லினர்.

நல்லவர்க்கு உறுதியாய் அல்லவர்க்கு இறுதியாய் இங்ஙனம் இவர் அங்கு அமர்ந்திருந்தார்.

இம்முனிவர் பெருமானின் அருளும் ஆதரவும் ஒருங்கே பெற்றுத் தென்திசை போந்து இராவணவேட்டையாடி அமரர் இடர்களைந்து, சீதையைச் சிறைமீட்டி, மீண்டு திருவயோத்தியை யடைந்து உலகமெங்கும் உயர்நலம் ஓங்கத் தன் இசை திசைதொறும் பரவ மனுநீதியோடு நெடுங்காலம் இராமன் முறைபுரிந் திருந்தான். அக்காலத்தில் சம்புகன் என்பான் ஒருவன் உம்பரும் வியக்கத்தக்கபடி அருந்தவம் ஆற்றிநின்றான். அவனைக் கண்டு மகிழ்ந்து கதிபெற விடுத்து அமரரும் முனிவரும் உடன்வர அவ்வள்ளல் இப்புனிதரை வந்து கண்டான். அவ்வமயம் தண்டகவனத்தின் வடகோடியில் தனியமர்ந்து இவர் தவம் புரிந் திருந்தார். வந்தவரனைவரும் இவரது மாட்சியை வியந்து வணங்கி நின்றார்.

மறைமிக, நல்லறந்தழைக்க, வாளவுணர் குலமுழுதும்
மறைந்து நாசம்
உற, எழுஞாலம்பிழைக்க, ஒருகுடங்கையால் வேலை
ஏழும் உண்ட
அறமுனிவன் ஆச்சிரமம் அணுகினரால் அடலரக்கன்
தலை யீரைந்தும்
இறமுனியுஞ் சிலையோனும், இந்திரனே முதலான
இமையோர் யாரும். (க)

வாசவனே முதலானோர் மாதவத்தோர் விதிமுறையோர்
மகிழ்ந்து செய்த
பூசனைகொண் டாங்கவர்கள்பொன்னுலகிற்போயினபின்
புரைதீர் உள்ளக்
கோசலைநாடன் காணக் கொண்டாடிப் பூசித்துக்
குசல வார்த்தை
பேசியினி திருந்ததற்பின் பெருந்தவத்தோன் இவை
யிவையே பின்புபேசும். (உத்தரகாண்டம்) (உ)

இங்ஙனம் அமரர்கோன் முதலாக அனைவரும் போன பின் இராமனைமட்டும் தம்முடன் தனியே இருக்கவைத்து இனிய வுரைகள் பல இன்புற ஆடினார். பின்பு அன்பு கூர்ந்து ஓர் அரிய மணிமாலையை எடுத்து அவனுக்குக் கொடுத்தார். கொடைக் குரிசிலாகிய அக்கோமான் அதனை வணங்கி வாங்கி மகிழ்ந்து பார்த்தான். விலை வரம்பின்றி விளங்கி நிற்கும் அதன் மேன்மையை வியந்து வியந்து நோக்கினான். காடுறை வாழ்க்கைசெய்யும் அடிகளுக்கு இப் பீடுடைய மாலை எப்படிக்கிடைத்தது என்று பேணி வின வினான். இது மிக நன்னயமுடையது. ஒருவகையில் நம் பால் வந்ததென்றார். அவ்வரவு என்னவகையில் எய்தியதெ ன்று அவன் பின்னருங்கேட்டான். இவர் புன்னகைசெய்து அதன் தன்மையை உரைத்தார். அடியில் வருதல் காண்க.

## சுவேதன்.

பண்டு சுவேதன் எனப் பெயரிய அரசனொருவனிரு ந்தான். அவன் அருந்திறலும் பெருந்திருவு முடையவன். விரும்பியபோகங்களை நுகர்ந்து இம் மேதினியை ஆண் டான். பின்பு அருந்தவம்புரிந்தான். அதன்பயனாக அய

னுலகடைந்தான். அடைந்தும் கொடும்பசிநோயால் அவன்
கடுந்துயருழந்தான். ஒருநாள் பிரமன் திருமுன்போய் அடி
தொழுது வணங்கி ஐயனே! புண்ணிய வுலகமாகிய இதில்
எனக்கு இத்துயர் நண்ணியதென்னை என்று அவன் நயந்து
கேட்டான். "சுவேதா! நீ உயர்ந்த அரசனாயிருந்தும் ஒரு
வர்க்கும் கொடாமல் தன்னையுமே கருதி உன்னையே பேணி
நின்றாய்; ஆதலால் அப்பெரும் பாவம் இங்குப் புகுந்து
வருத்துகின்றது; இஃது ஒழிய வேண்டுமாயின் முன்பு
கொழுக்கவளர்த்த உன் உடல் முழுவதையும் தின்றொழி
க்கவேண்டும்; அது நீ தவம்புரிந்த இடத்தே தனிவந்து
தோன்றும்; நாளும்போய் உண்டுவருக" என்று உணர்த்தி
விடுத்தான். சுவேதன் தான் இழந்த நிலையினை நினை
ந்து நினைந்து வருந்தி நாளும் வந்து அயன் குறித்த
படியே அப்பிணத்தைத் தின்றுபோனான். நாளும் நாளும்
வந்து தின்று போயினும் அது சிறிதும் குறையாமல்
மறுபடியும் மறுபடியும் நிறைவுற்று நின்றது. அதன்
நிலையினை நோக்கி நெஞ்சங் கலங்கினான். வேதனைமீக்கூர்
ந்து வேதனை அணுகினான். நாதனே நான் என்செய்வேன்!
என்று நடுங்கி நின்றான். அயன் நயந்து நோக்கினான்.
"அகத்திய முனிவரைப் பார்த்தாலன்றி உன் அகத்துறு
துயர் தீராது" என்றும் அருளி விடுத்தான். அவன் அக
ன்று வருந்தினான். இப்பெருமானைச் சிந்தித்து நின்று
தேம்பியழுது வழக்கம்போல் அதனை உண்ண வந்தான்.
அவ்வமயம் இவ் அருள்வள்ளல் அவன்முன் தோன்றி
னார். தோன்றவே கதிரவனைக் கண்ட இருள்போல் அவன்
பசிப்பிணியும் உடனே ஒழிந்தன. அவன் உவந்து
கூத்தாடி இவரடியில் வீழ்ந்தான்; ஐயனே! என்று அன்பு
ததும்ப அலறிப் போற்றினான். தவப்பேற்றினால் தான

டைந்திருந்த தெய்வ மணிமாலையை இவரிடம் தந்து மீண்டும் பணிந்து விண்ணோரேந்த விமானமூர்ந்து அவன் மேலுலகடைந்தான். தேவரனைவரும் இவரது தெய்வப் பெற்றியை வியந்து துதித்தார். இவரைக்கண்டதனால் சுவேதன் துயர் விண்டு கதியுற்ற அருமையை நினைந்து முனிவரெல்லாரும் புகழ்ந்து நின்றார். அன்று அவன் தந்த மாலையைத்தான் தற்காத்து வைத்திருந்து பின்பு இவர் இராமனுக்குத்தந்தார். அந்த அருமைப் பொருளைப் பெறுதற்குரிய தகுதியாளனாகத் தன்னை இவர் கருதிக்கொண்டிருந்த உரிமையை நினைந்து அவ் வள்ளல் உள்ளமுருகினான். அதன் வரன்முறை முழுவதும் தெளிவுற அறிய அவனிடம் இவர் உரையாடிய படியை அடியில் காண்க.

"வானவர்க்கன்றி மண்ணுல கத்தில் வாழ்
மானவர்க்கு வகுக்க ஒண்ணாதது;
தானவப்பகை யாகிய சார்ங்கி நீ
ஆனதற்பின் நினக்கணி யாவது. (க)

நீடுமாநிலத் தில்லது; நீண்மறை
பாடு பங்கயத் தோனுல குள்ளது;
தேடருஞ்சுடர்ச் செம்மணிப் பூணிது
கோடியென்று கொடுத்தனன் கோதிலான். (உ)

அந்த ஆபர ணங்கண்ட ஆழியான்
உந்து தீவினை யோர்முன் புனக்கிது
தந்துளோன் றனைச் சாற்றெனத் தன்னிடை
வந்தகாரண மாமுனி கூறுவான். (ங)

விரிந்த தானை விறலரக்கன் றலை
பருந்தும், நாயும் பகுத்துணப் பண்டுபோர்
புரிந்துளாய்! முன் புகுந்ததுகேட்டியால்
அருந்தவஞ்செய ஆமிடம் தேடுவேன். (ச)

சிங்கமாதி திரியக்கி யோனிகள்
தங்கிடாதது; சார்புள் ளகன்றது;
துங்கமானுடர் தோற்றம் இலாததோர்
கொங்குலாமலர்ச் சோலையைக் கூடினேன். (௫)

அன்னகானகத் தப்புயப் பூவணை
அன்னம்பேடையொ டன்போ டுறங்குவ
தன்னகங்கள் தழுவிய தாழ்கடல்
அன்னபூந்தட வாவிகண் டேனரோ. (௬)

ஆய வாவி மருங்கிடை யாருமில்
தூய ஆச்சிரமங் கண்டு அன்னிருள்
மேயவல்லதிற் றங்கி விடிந்தபின்
காயமாக ஒருசவம் கண்டனென். (௭)

அன்னகாலை யரம்பையர் ஆடிட,
மன்னுமாதவர் சூழ்தர, மாகதர்
துன்னிஎத்திடத் தும்புரு நாரதர்
என்னபோமென எங்கணும் பாடிட; (௮)

இந்திராதி இமையவர் போற்றிட
வந்து தோன்றினன் மாமணித்தேரின்மேல்
அந்தரார் விமானத்தடந் தேரினின்
றிந்தமன்னன் இழிந்திது செய்தனன். (௯

சாரவந்த சவத்தினைத் தன்வயி
றாரவுண்டு பெயர்த்தணி பொய்கையில்
வாரிமொண்டு குடித்துவாய் பூசிநற்
றேரிலேறிப் புகுதலும் சென்றுயான். (௰)

தேவ! இச்சவந் தின்றிடக் காரணம்
நீவிளம்புதி, நின்பெய ரேது? நீ
யாவன்? என்ன எழின்மணிப் பூணினோன்
பாவநாச! எனக்கிவை பன்னினான். (௰௧)

துங்கவரைத்தோள் வெற்பன்ன சுவேதனென்போன் தொல்லுலகில்
தங்குபுவன மீன்றெடுத்தாய் போகம்வளர்த்தோன் தனக்குரிய
மங்கையாரில் மூத்தவள்தன் வயிற்றிலுதித்தோன் சுவேதையென
எங்குநிகழ்பேர் மின்னனையாள் ஈன்றாள்சுவேதனென்போனை. (௬௨)

எந்தைவானம் எய்தியபின் ஈறைஞ்ஞூறாண் டெறிகடல்சூழ்
இந்தஞால மினிதாண்டிச் செல்லாப்பவையு மறுத்ததன்பின்
வந்தசுவேதற் கரசளித்து வருந்திமூவா யிரத்தாண்டு
சிந்தையொருங்கி அருந்தவங்கள் செய்தகாலந் தினையடைந்தேன்.

இந்தவனத்தி னெடுங்காலம் யான்செய்தவத்தா லெய்தரிய
அந்தணாளன் பேருலகமடைந்தும், அருந்தாகமும் பசியும்
வந்துநலிய மழைவண்ண மாயோன்றனது திருவுந்தி
தந்தமலரோன் தன்னுடைய தாளில்வணங்கி யிவைசொன்னேன்

பெறுதற்கரிய இவ்வுலகம் பெற்றும் பெருந்தாகமும் பசியும்
உறுதற்கென் காரணம்? இனியான் உண்பதேதென் றிட; நெஞ்சில்
இறுகர்தனத்தால் இரப்போருக் கிட்டுணதே யுன்வயிறும்
பறியைத்தூர்த்து வளர்த்ததனால் பசிநோய்நின்னைப் பற்றியதால்.

[பகரும்
பன்னுமறையின் பொருள்தெரிந்து படைத்தோன்பின்னும் இவை
பின்னுந்தருவார் அவ்வனத்துன் பிணத்தைநீயே பசிதீரத்
தின்னமாளாததுவாரும் செலறுதின்னிற் குண்டமுனி
தன்னைக்கண்டால் நின்பசியும் தாகமும்போம் எனவுரைத்தான்.

அன்றுதொடங்கி இன்றளவும் சுமந்தமாய இப்பிணத்தைத்
தின்றுதிரிந்தேன் என்பசியைத் தீர்த்தியென்றா னதுதீர
நன்றுபிழைத்தேனென வுவந்து இந்நல்லாபரணம் எனக்கீந்து
வென்றிவீர! விமானத்து விண்ணோர்சூழ அவன்போனான். (௬௭)

இன்னதாம் இவ்ஆபரணம் என்பால் வந்தவழியென்று
பன்னுவேத மாமுனிவன் பகரப்பரமன் வியப்பெய்தி
மன்னுமிருகம் பறவைநரர் வழங்காதொழிதல் இவ்வனத்தில்
என்னநிமித்தத்தால் இதுநீ இயம்பென்றியம்ப முனியியம்பும். (௬௮)

(இராமாயணம்.)

இவர் அடவியி லிருந்த இயல்பும், அருந்தவத்தின் உயர்வும், இவரது காட்சியால் உயிர்கள் எய்தியுள்ள மாட்சியும், உதவாமாந்தர் பின்பு உழந்துபடும் சிறுமையும், பிரமன் இவரைக் கருதிநின்ற அருமையும், இராமன் இவர்பால் வைத்திருந்த அன்பும், அவன்பால் இவர் கொண்டிருந்த அருளும், அரிய வுறுதிகள் பல இவரிடமிருந்து அவன் அடைந்துகொண்ட திறமும், பிறவும் இதனால் இனிதுணரலாகும்.

ஏமகூடம் மகேந்திரமுதலிய தனியிடங்களி லமர்ந்து அமரர்முதல் முனிவருக்கும், விதர்ப்பம் விதேகம் வங்கம் அங்கம் மகதம் கொங்கு முதலிய நாடுகளில் திரிந்து அரசர்முதலனைவருக்கும் இவர் அருள்புரிந்துள்ளார்.

சோழநாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்திலே முன்பு ஒரு சோழமன்னன் அரசுபுரிந்திருந்தான். அவன் வில்வலியில் மிகச் சிறந்தவன். போராற்றலில் பேராற்றல் வாய்ந்தவன். அருந்திறலோடு பெருந்திருவுடையனாய் விளங்கிநின்ற அவன் இவரைக் குலதெய்வமாகக் கொண்டாடி நின்றான். அவனுக்கு வேண்டிய உறுதிநலங்களை அமயந்தோறும் இவர் உரைசெய்து வந்தார். வருங்கால் யாவராலும் வெல்லமுடியாத வகையில் ஓர் அற்புத நகரையமைத்து அதிலிருந்துகொண்டு அசுரர் சிலர் இவ்வுலகருக்கு இடரிழைத்து நின்றார். கொடியவர் குடியிருப்பாகிய அந்நகரம் அரியமதில்கள் அமைந்து ஆகாயத்தில் அசைந்து தொங்கும் இயல்பினையுடையது. எவ்வளவு படைகள் வந்தெதிர்ப்பினும் தமக்கு யாதொரு ஊறு முறாவகை உயர்ந்துநின்று பகைவரை வென்று அவ் அரண்வலியால் அவ்வசுரர் மிகச் செருக்கிநின்றார். உயிர்களுக்குத் துயர்செய்து வருகின்ற அவர்களை ஒழிவுசெய்யக் கருதித் தம் அடியவனாகிய

அச்செப்பியனுக்கு ஒருநாள் இவர் ஓர் உறுதியை யுணர்த்தினர். இவர்குறித்தபடியே சென்று அம்மாயநகரை அவன் ஒரேதொடையில் அடியோடு மாயவீழ்த்தினன். அமரரும் வெல்லற்கரிய அச்சமர எயிலை இவரருள்வழி நின்று அவன் வென்றதைக் கண்டு அனைவரும் அதிசயித்தார். தன் மூதூராகிய பூம்புகார் மேம்பாடடையும்பொருட்டு இவருரைத்த வண்ணம் இந்திரவிழாவைச் செய்து அவன் இசைபெற்று நின்றான்.

“உலகத்திரியா ஓங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவன் உரைப்பத்
தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக் கோளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென
அமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது”

(மணிமேகலை)

“ஒன்னாருட்கும் துன்னருங் கடுந்திறற்
றூங்கெயிலெறிந்த நின்னூங் கணோர்” (புறநானூறு)

தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்” (சிறுபாண்)

இன்னவாறு பலநூல்களிலும் மேற்குறித்த வுண்மை குறிக்கப்பட்டுள்ளது. இவர் சொன்னவாறுசெய்து அம்மன்னன் இன்னிசை யெய்தி நின்றதுபோல் பின்னரும் பலர் இவரைப்போற்றி விளங்கினர்.

## காந்தன்.

காந்தன் என்னும் முன்னொரு சோழமன்னன் இவரைநாளும் நினைந்து போற்றி நீள வழிபட்டு வந்தான். அவன் நல்ல நீதிமான். அவனை ஆதரித்து இவர் அருள் செய்து வந்தார். வருங்கால் தன் நாடு என்றுங் குன்றாத நீர்வளமுடையதா யிருக்க வேண்டுமென்று நெடுநாளாக அவன் மிக விழைந்து நின்றான். ஒருநாள் வந்து இவர் அடிபணிந்து வேண்டினன். உடனே தமது கமண்டலத்தி லிருந்த காவிரி நீரைச் சிறிது நிலத்தில் கவிழ்த்து "நலத் தில்பொலிக" என நாவின் நவின்று எங்கும் பொங்கிப்பெருகி என்றும் இன்புசெய் திருக்கும்படி இவர் எண்ணி விடுத்தார். அவ்வாறே அது பரந்து நிலவி இவரருள்போல் விரிந்து நின்றது.

"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற"

(மணிமேகலை)

இவர் தங்கையிலிருந்து வந்தமையால் "கங்கையிற் புனிதமாய காவிரி" என யாவரும் போற்ற இங்ஙனம் அது பூவிரிந்துள்ளது. இவ்வண்ணம் அம் மன்னன் இவரின்னருளெய்தி முன்னிய போகங்களை நுகர்ந்து மன்னுலகோம்பினன். அக்காலத்தில் பரசுராமன் அரசர் குலத்தைக் கருவறுத்து வந்தான். அவ் அறுவாயில் அழிவுறுவண்ணம் அவன் இவரருள்வாயடைந்தான். தன் காமக்கிழத்தியின் புதல்வனாகிய ககந்தன் என்பவனை அரசனுக்கி வைத்துவிட்டுத் தம்

அடிபடைந்து நின்ற அவனை இவர் அருள்புரிந்து காத்தார். இறைவனருளால் மார்க்கண்டன் யம பயமின்றி உய்ந்து நின்றதுபோல் இவரருளால் அன்று அவன் உய்ந்திருந்தான். அவ்வுய்தியை வியந்து அனைவரும் இவரை அடுத்தோர்ப் புரக்கும் அருள் வள்ளலென ஆர்வமிகுந்து உவந்து துதித்தார்.

"ககந்த னுமெனக் காதலிற் கூஉய்
அரசாளுரிமை நின்பால் இன்மையிற்
பரசுராமனின் பால்வந் தணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது
துயர் நீங்கு கிளவியின் யான்தோன் றளவும்
ககந்தன் காத்தல் காகந்தி என்றே
இயைந்த நாமம் இப்பதிக் கிட்டீங்
குள்வரிக் கொண்டவ் வரவோன் பெயர்நாள்"
(மணிமேகலை).

என்றபடி பெயர்வுற்று இவ் அறவோர் முதல்வர்பாலடைக்கலம் புகுந்து அவன் ஆருயிர் உய்ந்து அமைந்திருந்தான். "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" என்றவண்ணம் அவன் கொண்டு நின்றதும், தம்மை அடுத்தாரை ஆதரித்து இவர் காத்து வந்ததும், யாண்டும் மரணமின்றி விளங்கும் அருமை கருதி அமர முனிவன் என எவரும் போற்ற இவர் அமைந்துள்ளதும் பிறவும் இதனால் இனிது அறியலாகும்.

இச் சாந்தரையடைந்து அவ்வேந்தன் உய்ந்திருந்த உண்மையை நாரதர் உய்த்துணர்ந்து, அம்மழுவாள் வீரனிடம்போய் வழுவாதுரைத்தார். பண்டொரு பாலனைப் பற்றச்சென்று காலன் கண்ட கதியை யான் காணும்படி நீர்

இன்று காட்ட வந்தீரா? என்று அவன் காட்டி நகைத்தான் யாண்டும் அஞ்சாத வீரனாகிய உன் நெஞ்சினுள்ளும் இவ் அச்சமுள்ளதா? என்று அவர் அசைத்துப் பார்த்தார். அவ் ஆண்டகை யாதும் அசையவில்லை. இத் தவச்சிங்கத்தின் தனியாற்றலை அவ் வரச்சிங்கம் உணர்ந்தமைந்திருக்குந் தன்மையை வியந்து அவர் அகன்று போயினர்.

வதுவாதிபன், திராவிடபூபன், கிருதபவன், கவேரன், சுகுணன், முதலிய அரசர் பலரும் இவரையடைந்து உயர்நலமடைந்து அமரரும் புகழ விளங்கியிருந்தார்.

இன்னவகையே இயல்நெறி வழாமல் மன்னுயிர்க்கெல்லாம் இன்னருள் செய்து எண்ணிய இடங்களில இவர் இனிதமர்ந்திருந்தார். இவர் இருந்த இடங்களெல்லாம் தவமணமும், தமிழ்மணமும் கமழ்ந்து தெய்வப்பெற்றியுடையனவாய்த்திகழ்ந்து விளங்கின. மதிநலம்வாய்ந்த மாதவர் பலர் ஆண்டுதோறும் ஒருங்கு திரண்டுபோய் இவரினிதிருந்த தனிநிலையங்களைத் தரிசித்து வந்துள்ளார். இன்றும் இவர் திருவுருவமைந்த ஆலயங்கள் பொதியமலை முதலிய இடங்களில் இருந்து வருகின்றன.

நேரிசை வெண்பா.

பொதியமுத லாய புனிதநிலை யெல்லாம்
புதிய நலங்கள் பொலிய—முதியதவஞ்
செய்திருந்த ஐயன்றன் சேவடியைத் தம்மகத்தே
பெய்திருந்தார் பெற்றுயர்ந்தார் பேறு.

# மூன்றாவது இயல்.

## குணம்

மலய மாமலை நிலைய மாக
மன்னிவீற் றிருந்து இன்னருள் புரிந்த
அருந்தவக் குருசில் அடிமல ரகத்துட்
பொருந்தி வாழ்தும் புலமை யின் புறவே.

இவரது குணநலங்களைக் குறித்துக் கூறப்புகுங்கால் "குணங்களை என் கூறுவது? கொம்பினைச்சேர்ந்து அவை யுய்யப் பிணங்குவன;" "ஆய்ந்தேற அயற்கேயும் அறி வரிய" என்னும் அருமைத் தொடர்கள் நினைவிற்கு வரு கின்றன. குணமென்பது உயிரின் சாரமா யமைந்துள்ளது. இனிய குணங்களே மனிதனைப் புனிதனுக்கித் தனி நிலை யில் நிறுத்துகின்றன. மலர், மணத்தால் நலமுறுகின்றது; மனிதன் குணத்தால் உயர்வுறுகின்றான். குணமில்லாதமனி தன் மணமில்லாத மலர்போல் மாண்பிழந்து படுவன். குண முடைமையே உயிர்கட்கு உயர்வுடைமையாகும். அருள், அமைதி, அடக்கம், பொறை, நிறை, வாய்மை, தூய்மை, வண்மை முதலிய உத்தம குணங்களெல்லாம் இவரிடம் உவந்து குடிகொண்டிருந்தன. அதனால் இவர் குண நிலைய மென நிலவி நின்றார். "குணநலம் சான்றோர் நலனே" என்ற ஆன்ற மொழிக்கு அமைந்த இலக்கியமாய் இவர் விளங்கி யிருந்தார். குணநல முள்ள மனிதன் சன சமூகத்திற்கு ஓர் இனிய கனி மரம்போல் இதம் பல புரிந்து நிலவி நிற்பா னென்பதை உலகம் இவர்பால் உணர்ந்து நின்றது.

எல்லாவுயிர்களும் இன்புற்றிருக்குமாறு எண்ணி பொழுகுந் தண்ணளியாளர். உயிர்கட்கு இதஞ்செய் தொழுகலே உயர்ந்தவர்க்கு இயல்பாம். எவ்வளவுக்கெவ் வளவு இத்தன்மையில் ஒருவன் அமைந்து நிற்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் உயர்ந்தவனாகின்றான். இத் தன்மை குன்றுவார் புன்மையாளராய்ப் பொருந்தியிழிவர். தம் உளத்தில் அமைந்த அருட்பண்பிற்குத் தக்கவாறே பெரியோரெனச் சிறப்புற்றிருக்கின்றார். பிறவுயிர் சிறிது வருந்தக் காணினும் அவர் உள்ளம் உருகி விடுகின்றது. "வேறொன்றை ஒருவர் கொல்லின் அந்நேரம் ஐயோ! என் முகம் வாடி நிற்பதுவும் ஐய! நின் அருளறியுமே" என்பது தாயுமானவர் வாக்கு. இதனால் அவரது அருளினியல்பு இனிது புலனாகின்றது. புறத்தில் தோன்றுகின்ற இத் தகைய வாக்கு மூலங்களே அவரவரது அகநிலைகளை நோக்கி யறிதற்குத் தகுதியான கருவிகளாயுள்ளன. இங்ஙனம் செந்தண்மை பூண்டொழுகலே முற்றத்துறந்த முனிவோருக்குத் தகவாகுமாதலால் அவ்வுண்மைக்கு இவரோர் தனி யுரிமையா யினிதமர்ந்திருந்தார்.

> "அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ் வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்." (குறள் 30)

என்பது தேவாருளுரை. ஒழுகலான், அறவோர் என்றதனால அங்ஙனம ஒழுகாதார் மறவோர் என்ப தாயிற்று. இத் தெய்வத் திருமொழியின் பொருளருமை களை யூன்றி யுணர்க. பசி முதலியவற்றால் தமக்கு நேர்ந்த துன்பங்களைப் பொறுத்தும், வினை முதலியவற்றால் பிறர்க்கு நேர்ந்த இடர்களை யறுத்தும், தம் மன மொழி மெய்களை யாண்டும் புனித நீர்மையில் வைத்து இனிதொழுகுவோரே

மூனிவராவர். இவ்வகைச் சீலமுடையாரை இஞ்ஞாலம் நாளும் சிந்தித்துப் போற்றும். உள்ளும் புறமும் ஒத்து உயர்வுள்ளி நிற்போரே என்றும் உயர்ந்து திகழ்வர். அகத்தில் புனிதமெய்தி மிக மகத்துவ முடையரா யமைந்திருந்தமையால் இவர் **அகத்தியர்** என நின்றார். இவரது நிலையினை வியந்து **அமரமுனிவர்** என அமரரும் துதித்தார்.

நல்ல எண்ணங்களை நாளும் நினைந்து வந்தால் உள்ளம் புனிதமாம் என உயிர்களுக்கு இவர் உணர்த்தி வந்தார். இனிய நீரால் உடம்பு தூய்மையாம்; நல்ல குணங்களால் உள்ளம் புனிதமாம்; மனத்தைத் தூய்மைப்படுத்தி எனைப் பல நலங்களும் எளிதிலெய்து மாறு விளைத்து நிற்றலால் நற்குணங்களை மானத தீர்த்தம் என்பர். இவ்வுத்தம நீர்மையில்லாதார் வேறு எத்தகைய நீர்களில் எவ்வாறு சென்றாடினும் அவர் செவ்வியராகார். அகத்தில் அழுக்கை வைத்துக் கொண்டு புறக்கோலம் செய்தால் அதனால் என்னாகிப் போம்? கள்ளுப் பானையை வெள்ளத்திலழுத்திக் கழுவியது போல் உள்ளத்தீமை யுள்ளவன் நீராட்டம் எள்ளத்தக்கதேயா மென்க. இனிய குணங்களாகிய புனித நீரே உயர்நதோராடுதற்குரிய அருமைத் தீர்த்தமாகக் கருதப் பட்டுள்ளது. அடியில் வருவது காண்க.

"சத்தியம், தானம், சம்மதம், இன்சொற்சாற்றுதல்,
ஒரு வழிப் படுதல்,
புத்தியே முதல கரணம் ஓர் நான்கும் அடக்குதல்,
புலன்கள் போம் வழியில்
உய்த்திடா தமைத்தல், பொறைதிடம், ஞானம், உயிர்க்
கெலாம் தண்ணளி புரிதல்
இத்திறமனைத்தும் மானத தீர்த்தம் என வெடுத்தியம்
பினர் மேலோர். (க)

அறத்துறை பயிலும் மானததீர்த்தம் ஆடலாகி நீராடிற்,
புறத்தழுக் கொழிவதல்லது புனிதராகிலர்; பூந்திரை சுருட்
டும், சிறைப்புனலதனில் முழையுறழ் பகுவாய்த் திமிழ்க்
கூரெயிற் றிடங்கர், சுறக்குல முதல அளப்பருங்காலந்
தோய்ந்ததால் துறக்கமுற் றனவோ? (காசிகாண்டம்) (உ)

அகத்தில் நல்ல குணங்களில்லாதவன் புறத்திலுள்ள வெள்ளங்களில் போய் வீழ்ந்து வந்ததனால் அவன் மேன்மையடைந்து கொள்ளான் என இது விளக்கி நிற்றல் காண்க. உள்ளந்திருந்தாதவன் புறத்தில் உயர்ந்தவன் போல் எவ்வளவு நடித்தாலும் உண்மையில் அவன் உயர்ந்தவனாகான். ஊற்றுப் புனிதமாயிருந்தால் அதிலிருந்து ஊறிவரும் நீரும் இனியதாம்; அதுபோல் ஒருவன் மனம் நல்லதாயிருந்தால் அவன் மொழிசெயல்களெல்லாம் நல்லனவாகும்.

இங்ஙனம் மனநலம் வாய்ந்து இனிய ஞானசீலராய் நின்று புனிதநிலை யெய்திய முனிவரெவரினும் குணநிலையில் இவர் முதன்மையெய்தி நின்றார். தவவாழ்க்கையிலிருந்தாலும் உலக வொழுக்கங்க ளெல்லாவற்றையும் வழுவறத் தெளிந்து இவர் உயர்ந்திருந்தார். இருவினைகளும் விளைதற்கு நிலைக்களமாயுள்ள முப்பொறிகளையும் செப்பமுறச் செய்து இவர் சிறந்து விளங்கினார்.

"உள்ளச் செய்தி தெள்ளிதிற் கிளப்பின்
இருள்தீர் காட்சி; அருளொடு புணர்தல்;
பெரும்பொறை தாங்கல்; பிறன்பொருள் விழையாமை;
செய்த நன் றறிதல்; கைதவங் கடிதல்;
ரு பால்கோடாது பகலிற் றோன்றல்;

மானமதாணி ஆணியிற் றூங்கல்;
அழுக்கா றின்மை; அவாவிற் றீர்தல்;
அருந்துயர் உயிர்கட் கிருந்த காலை
அழல்தோய் வுற்ற மெழுகே போலக்
கழலு நெஞ்சிற் கையற் றினைதல்;
பன்னருஞ் சிறப்பின் மன்னுயிர்த் தொகைகட்கு
அறிவும், பொறியும், கழி பெருங்கவினும்,
பெறற் கருந் துறக்கமும், இறப்ப வூங்குத்
தம்மினும் வேண்டுமென் றெண்ணும் பெருங்குணம்;
வாக்கொடு சிவணிய நோக்கின் மீக் கொள
அறம்பெரி தறைதல்; புறங்கூறாமை;
வாய்மை, கல்வி, தீமையிற் றிறம்பல்;
இன்மொழி யிசைத்தல்; வன்மொழி மறத்தல்;
அறிவுநூல் விரித்தல்; அருமறை கழறல;
அடங்கிய வறைதல்; கடுஞ்சொல் விடுத்தல்;
காயத் தியைந்த வீயா வினையுள்,
அருந்தவம் தொடங்கல்; திருந்திய தானம்;
கொடைமடம் படுதல்; படைமடம் படாமை;
அமரர்ப் பேணல்; ஆகுதி அருத்தல்;
ஒழுக்க மோம்பும் விழுப்பெருங் கிழமை;
உடம்பிடி யேந்தி யுடல்தடிந் திடுமா
ரடைந்த காலை அவணியல் துயரம்
தேரா ரல்லர், தெரிந்தும் ஆருயிர்
பெரும்பிறி தாக விரும்பிண மிசைஞரின்
ஓராங்குப் படரா மாசில் காட்சி;
ஐம்பெரும் பாதகத் தாழி கீந்தல்;
இந்தியப் பெரும்படை யிரிய நூறும்

வன்றறு க்ண்மை; வாளிட்டாங்கு
நோவன செய்யினு மேவன செய்தல்;
தவச்சிறி தாயினும் மிகப்பல விருந்து
பாத்தூண் செல்வம்; பூக்கமழ் இரும்பொழில்
தன்மனைக் கிழத்தி யல்லதைப் பிறர்மனை
அன்னையிற் றீரா நன்ன ராண்மை;” (ஞானாமிர்தம்)

என்னும் இன்னவகையான நன்னயங்கள் யாவும் ஒருங்கே வாய்ந்து பெருங்குணக்குரிசிலாய் இவர் சிறந்திருந்தார்.

அரசராயினும் முனிவராயினும் ஏதேனும் தமக்கோர் துயரமணுகினால் இவரையணுகி இடர் நீங்கி இன்புற்று நின்றார். சிறியாரைப் பெரியார் கவியாதபடி எவரையும் இவர் பேணி வந்தார். நல்லவர்க்கெல்லாம் நற்றாய் என இவர் நண்ணியிருந்தார். ஏழை பங்காளரா யிசைந்திருந்தமையால் இறை யென எவரும் இவரை இறைஞ்சி யேத்தினார். தாம் கருதிய வினையைக் கடைபோகச் செய்து உறுதி பெற முடிக்கும் உண்மையாளராயிவர் உயர்ந்திருந்தார்.

ஒருமுறை உத்தரகுருவிலிருந்து வந்த முனிவர் சிலர் நைமிசத்தின் தென்பாலிருந்த ஓர் தனி வனத்தில் அசுமேதம் என்னும் அரிய வேள்வி ஒன்றை ஆற்றி நின்றார். அவ் வேள்வியருகில் மந்திர முறையோடு நாட்டியிருந்த யூபத்தறியில் ஓர் ஆட்டைக்கொண்டுவந்து கட்டியிருந்தார். இயல்பாக அவ்வழி வந்த இவர் அதன் நிலைமையை நோக்கி நெஞ்சம் இரங்கி அதனை அவிழ்த்துவிடும்படி அவரிடம் உரைத்தார். வேதத்தில் கூறிய விதிப்படி யாங்கள் இவ் யாகத்தைச் செய்கின்றோம்; தேவர் வேறு கூறுவது

மாறன்றோ? என்று அவர் வாதாடி நின்றார். இவர், வேதம் என்ன கூறியுள்ளது? என்றார். அவர், அசம்கொண்டு யாகம் செய்க என்று கூறியுள்ளதே என்றார். “அசம் பெய் தவிசொரிந் தாற்றி வானோர் — வசம் பெய் தருளின் மாநிலஞ் செழிக்கும்” என இன்னவாறு அதன் பெயர் குறித்துப் பின்னவரும் உரைத்துள்ளாரே என்று அவர் எதிர்த்து நின்றார். இவர் அசம் என்னும் சொல்லுக்குப் பொருள் என்னை? என்றார். அவர், “ஆடு” என்றார். அது மூவாட்டை நெல்லைக் குறித்ததேயன்றி, ஆட்டைக் குறிக்கவில்லை; மொழிப்பொருள் தெரியாமல் நீவிர் இங்ஙனம் வழுப்படல் தீது; கொல்லுதற்றொழிலில்லாமல் அந்நெல்லைக்கொண்டு இவ்வேள்வியைச் செய்மின் என இவர் விதித்தருளினார். அவர் எதிர்த்துரைக்க அஞ்சி அப்படியாயின் அடிகளே இதனை அவ்வாறு செய்துமுடிக்கவேண்டுமென்று சேர்ந்து மொழிந்தார். இவர் சரி என இசைந்து அவர் காணும்படி பொதியையின்கண் இருந்து அந்நெல்லைக்கொண்டே சொல்லிய அவ்வேள்வியை முடித்து இந்திரனை வந்து அவி ஏற்றுக்கொள்ளும்படி சிந்தித்தார். வழக்கத்திற்கு மாறாகச் செய்து இங்ஙனம் வலிந்திழுக்கின்றாரே என்று அவன் வராமல் மறைந்து நின்றான். உடனே இவர் அரன், மால், அயன், என்னும் முதல்வர் மூவருக்கும் அவியினை அளித்துவிட்டுத் தவவலியால் பல வளங்களும் சுரக்கச் செய்து இவ்வுலகினை யுயர்நிலையில் நிறுத்தி அவியேலாது நின்ற அமரர் கோனை இவர் சிறிது சினந்து நினைந்தார். அவன் அஞ்சி வந்து இவர்பால் அடங்கி நின்று “மகத்திற் கொல்லப்பட்ட உயிர் பரத்திற் செல்லுமே; ஆகலால் அது கொலை வினையாகாதே; என் அடிகள் அதனை

மறுக்கவேண்டும்?" என்று மறுகி வேண்டினன். தின்னு தற்பொருட்டுக் கொல்லுதல்போல் அது கொலைவினை இல்லை எனினும் எவ்வகையினும் ஓர் உயிரைக் கோறல் புலை வினையேயாம் என இவர் உறுதிபெற வுணர்த்தி இன்று முதல் இவ்வாறே அவ் வேள்வியை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என இசைத்தருளினர். அவன் இசைந்து வணங்கி ஏத்திச் சென்றான். அன்றுமுதல்

"மூவாட்டை நெல்லும் ஆடும் அசமே"

என்றுகூட ஒரு பொருளைக்கொண்டு அச்சொல் நீடி நின்றது. இதனால் இவரது அருட்பண்பும், ஆருயிர் ஓம்பி நின்ற அருமையும், மும்மூர்த்திகளும் இவர்பால் கொண்டிருந்த உரிமையும், இவர் ஏவலைச் செய்யத் தேவர்கோனும் ஆவலுற்று நின்றதும், பிறவும் அறியலாகும். இவ்வாறு வித்தினைக்கொண்டே இவர் வேள்வி செய்த மேன்மையை வியந்து வியாசர் தம் அருமைத் திருநூலாகிய பாரதத்துள் விரித்துக் கூறியுள்ளார்.

"பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறனறிதல் சான்றவர்க்கெல்லாம் கடன்" (கலித்தொகை) என்னும் உண்மையை உலகம் இவர்பால் உணர்ந்து மகிழ்ந்தது.

"தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயிராய்ப் பிறந்துயர்ந்து போகுமே"
(சீவகசிந்தாமணி)

என்னும் இவ்வுறுதி உண்மைகளை உலகம் காண விளக்கி யாண்டும் இரக்கமுடையராய் இன்னுயிரைப்

மாதவ வலியால் இவர் உண்டு நின்றதைக் கண்டபோது அமரர் கொண்ட உவகையை யார் சொல்ல வல்லார்? அமரர் கோன் விரைந்து புகுந்து பகைவனைக்கண்டு வென்றுகொண்டான். அதன் பின் உண்டதை யுமிழ்ந்து பண்டு போலப் பரவையை இவர் பரவச் செய்தார். இவ் அருஞ்செயலைக் குறித்துப் பல நூல்களும் வியந்து கூறுகின்றன. "சோற்கலை முனிவன் உண்ட சுடர்மணிக்கடல்'' என இவரது இனிய வாய்புகுந்ததே அதற்கோர் புனிதமாக மதித்து அது புகழப் பட்டுள்ளது.

"தீதுறும் அவுணர்கள் தீமை தீர்தர
மோதுறு கடலெலாம் ஒருகை மொண்டிடு
மாதவன்'' (இராமாயணம், தாடகை வதம் 34).

எனக் கடல் குடித்த செயலோடு உடனிறுத்திப் புலவர் பலரும் இங்ஙனம் இவரைப் புகழ்ந்து துதித்தார். மனிதனாவது! கடலைக் குடிப்பதாவது! இது, இயற்கைக்கு ஒவ்வாதது; என இதனைக் குறித்து வாதாடவும் கூடும்; அங்ஙனம் வாது புரிய வருவார், இக் கடல் குடிப்பது மட்டும் அன்று,

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு.'' (குறள் 269)

என்னும் இப் பொய்யாமொழியின் பொருள் நோக்கினைப் புலங்கொண்டுணரவேண்டும். உணரின் பொதுவாக எவரும் முடிக்க முடியாததையும் தவம் முடித்து வைக்கும் என்னும் முடிவுக்கு வருவர். இச்செய்கையில் ஐயம் கொள்வாரை நோக்கித் தெய்வப்பெற்றியை ஏற்றிப் பரஞ்சோதி முனிவர் அரண் செய்து கூறியுள்ளார். அடியில் வருவது காண்க,

"கைதவன் கரந்துவைகும் கடலை வெற்படக்கும் கையில்
பெய்து, உளுந்து எல்லைத்தாக்கிப் பருகினன்; பிறைசேர்சென்னி
ஐயனது அருளைப் பெற்றார்க்கு அதிசயம் இது என்கொல்! மூன்று
வையம், முத்தொழிலும் செய்ய வல்லவரவரே அன்றோ?"
(திருவிளையாடல்)

அரிய காரியங்களையும் தவமகிமையால் எளிதில் செய்யலாம் என்னும் உறுதி நலனை உலகம் தெளிய இவர் நிலை செய்துள்ளன பல. புராண நோக்கு, புலமை நோக்குகளை விடுத்து இயற்கை நோக்கோடு இணைத்துவைத்து இவர் செயல் வகைக்குப் பொருள் கூறுவாரு முளர்.

ஒருமுறை விந்தமலைக்கும், மேருமலைக்கும் வெம்பகை மூண்டது. மலைகள் என்றால் கல்லுருவங்களாயினவே அவற்றிக்குப் பகை நண்புகளாகிய பண்புகள் உளவோ? எனின், இங்கு மலைகள் என்றது அவற்றின் அதிதேவதைகளை என்க. விந்தமானது மேருவோடு மாறுபட்டு மீறி எழுந்து சீறி நின்றது; அதனால் வானில் இயங்கும் ஆதவன் முதலிய அமரர்களுக்கெல்லாம் துயர் மிக விளைந்தது. தேவர் சிலர் இவரிடம் வந்து தமது இடர்களைந்தருளும்படி குறையிரந்து நின்றார். இவர் அருள்புரிந்தெழுந்து அக்கிரியினையடைந்தார். அமரரை அருகுவர ஒட்டாதபடி அகல நிற்கச் செய்து இவர் தனியே அதன்பால் இனிதாய் நெருங்கினார். இவரைக்கண்டவுடனே அம்மலைஅரசன் மனமிக நடுங்கி வந்தடி வணங்கினன். அவனை ஆதரித்து அணைத்து இனி யார்க்கும் இடர் செய்யற்க; என அறிவுறுத்திவிட்டு இவர் தென்திசை நோக்கி வந்தார்.

"கடல்ஏழும் ஒருகுடங்கைக் கொண்டகுறு முனிவருதல்
காண்டலோடும்,
உடல்வேர்வு வரவுள்ளம் பதைபதைப்பத் தலைபனிப்ப
உயிர்ப்பு வீங்கிப்

படியூடு புகுவதெனப் பணிந்து மறைக்கிழவரெழிற்
படிவம் தாங்கித்
தடமேருவுடன் இகலும் விந்தவரை முனிவன் அடி
தாழ்ந்ததன்றே;
தன்றுணைத்தாள் தொழுதெழுந்த விந்தவரை முகநோக்கித்
தவத்தின் மிக்கோன்
இன்றுமுதல் பொதியவரை நீங்கியான் இவ்வழிமீட்
டெய்து காறும்,
உன்றனது பேருருவம் இவ்வண்ணம் இருக்கவென
உரைத்துப்போனன்
தென்றல் இளங்குழவியொடு தீந்தமிழும் இனிதுலவும்
தென்பால் மன்னே." (காசிகாண்டம்)

இந்த வண்ணம் இவர் விந்தம் அடக்கிய உண்மை கந்தபுராணம் முதலிய பல நூல்களிலும் காணலாகும்.

இசைதிசை பரப்பித் தென்திசை புகுந்த இவர் திருக்குற்றாலத்தை யடைந்தார். அவ்வமயம் அங்குத் திருமால் கோயில் கொண்டிருந்தார். அப்பெருமாள் கோவிலைச்சுற்றி இருநூறு வேதியர் இல்லங்கள் எதிரெதிரா யிசைந்திருந்தன. அவரனைவரும் ஒருமாலடிக்கே பெருமால் கொண்டவர். சிவ வேடத்துடன் வந்த இவரைக் கண்டவுடனே அவர் கடுத்தார்; கோயிலுட் புகலாகாதென்று தடுத்தார். விரிந்த கல்வியும், தெளிந்த அறிவும் இல்லாமல் குறுகிய நோக்குடையராய் மறுகியிருக்கும் அவரது புல்லிய நிலையைக் கண்டு இவர் புன்னகை புரிந்து விரைந்து மீண்டு வேறொரு இடம்போய் நின்று யாரும் தேறலாகாவண்ணம் சீரியதோர் வைணவ வேடங்கொண்டு மாறி வந்தார்.

"மட்டவிழ் துளபமாலை பவுத்திர மாலை பூண்டு
பொட்டணி நுதல்மேல் ஊர்த்தபுண்டரம் துலங்கச்சாத்திப்
பட்டவர்த்தனர்கள் சூழப் பரமபாகவதனாகி
எட்டெழுத்தோதி உள்ளேயுண்மை எட்டெழுத்தை உன்னி;

காதிடைத் துளவவேடம் கனக குண்டலங்கள் சாத்தி
ஆதி, அச்சுதன், கோவிந்தன், ஆலமர்கடவுள், என்ன
ஓதிய பொது நாமங்கள் உரைத்து நம்பெருமான் சங்க
வீதியிற் புகுவான் போந்தான் வேதியர் சங்கவீதி" (உ)

இவ்வகை வந்த இவரை நோக்கியவுடனே முன்பு போக்கி நின்றவரெல்லாரும் தமர் என நினைந்து புகழ்ந்து பணிந்து போற்றி நெருங்கினர். அனைவரும் உடன் வர இவர் ஆலயம் புகுந்தார். மாலுருவாய் நின்ற அம் மூர்த்தி சிவ வடிவமாய் மருவி யமரும்படி உருகி நினைந்து இவர் கருதி நின்றார். அவ்வாறே அக்கருணைக் கண்ணன் கண்ணுதல் உருவாய் நண்ணிவிளங்கினன். அவன் விளங்கி நின்றபடியை அடியில் பார்க்க.

"முறுகுவலம் புரிக்கரத்து, மான்குறுகப்; பெரியதுழாய்
முடியின் மீது,
சிறியமதிக்கலைகுறுகத்; திலகநுதல், விழிகுறுகச்;
செழும்பூண் மார்பின்,
நிறையரவப் பணி குறுக; நிகிலவுலகமும் நிறைந்து
நீண்ட மேனி,
குறுகு, குறுகு, எனப்பரவித்திருவடிக் கீழ்க்குறுமுனிவன்
குறுகுங்காலை; (க)

தவம்பெருக, அறம்பெருகப், பொருள்பெருகத், தெருள்
பெருகச், சைவம் ஓங்கிச்

கூவம்பெருக, மனுநீதித்துறைபெருக, நிறைபெருகச்,
சுருதி வாய்மை
நவம்பெருகச், சரியாதி சதுட்டயங்கள் தனிபெருக,
ஞாலம் எல்லாம்
சிவம்பெருகக், குறுகி அருள்பெருகினன் குற்றாலத்
தேவ தேவன். (உ)

சித்திரைல் கரும்பொன்மேனி செம்பொனும் படிபோல் நம்பன்
பத்தியால் உருகி மாலாம் படிவனே பரமனானன்;
சத்துடன் அசத்துமாகிச், சதசத்துமான ஞான
நித்திய நிமலானந்த நிட்கள சகளமூர்த்தி" (௩)

(திருக்குற்றாலத்தலபுராணம்)

இவரது தெய்வப்பெற்றியும், மெய்மைப் பத்தியும் இதனால் இனிதறியலாகும். அன்பர் நினைந்த வண்ணம இறைவன் அமைந்து நிற்பன் என்பதற்கு இது, அமையும் சான்றாம். இவர் செய்கையை யறிந்து தெய்வ வுலகமும திகைத்து நின்றது. இவ் அற்புதம் புரிந்து இறைவழிபாடு செய்து பொதிய மலைமேவி முதிய தமிழ் விளங்க இவர் முதன்மையெய்தி நின்றார். அண்டரும் முனிவரும் கொண் டாடப்பெற்று எண்டிசை எங்கணும் இசைபெறச்செய்து தண்டமிழ் முனி என இம் மண்டலம் புகழ அங்கு இவர் மருவியிருந்தார். அக்காலத்தில் சந்திரகுலவேந்தனாகிய நகுடன் என்பவன் நூறு அசுவமேதயாகங்கள் செய்து அதன் பயனாக இந்திர பதவியை யடைந்தான். இவ்வுல கில் மாறுபடாமல் நூறு பரிவேள்விகளைச்செய்து ஒருவன் நிலைத்து நிற்பானாயின் இந்திர திருவிற்கு அவன் உரியவனா வான். அதனால் இந்திரனுக்குச் "சதக்கிரது" என ஒரு

பெயரும் அமைந்துள்ளது. சதம் = நூறு. கிரது = யாகங்களை புடையவன். இந்த வகையில் இந்திர பதத்தை எய்துகின்றவரது தகுதி யுண்மையை நன்கு சோதிக்கும் பொருட்டு முனிவர் எழுவர் தனியுரிமையாய் நியமனம் எய்தியிருந்தார். அவருள் நமது அகத்தியமுனிவர் முதல்வராவர். மற்ற அறுவர் ஆங்கிரசர், காசிபர், கௌதமர், புலத்தியர், மார்க்கண்டர், வசிட்டர் என்க.

"அகத்தியன் புலத்தியன் அங்கிரா கௌதமன்
வசிட்டன் காசிபன் மார்க்கண்டேயன் என்று
இசைத்த இவர்தாம் எழிரு டிகளே" (பிங்கலந்தை)

இம்முனிவர் எழுவரும் தங்கச்சிவிகை தாங்க இடையில் யாதொரு பங்கமுமில்லாமல் அதில் தங்கி வந்துவிடுவானயின் பூரணமாக அவன் இந்திரனேயாவன். இத்தகைய சோதனை ஒன்று புத்தேளுலகத்தில் இடையே பொருந்தியிருந்தது. இங்ஙனம் இருந்து வருங்கால் பழைய இந்திரன் ஓர் பழியினை யடைந்து தன் பதவியை யிழந்தான்; அப்பதவிக்கு மிகுதியும் தகுதியெய்தி நெடிது நின்ற இந் நகுடன் அங்கு நேர்ந்து வந்தான். சுதர்மை என்னும் தெய்வமணி மண்டபத்திலிருந்து அவன் பொற்சிவிகையில் ஏறிப் போவிந்து விளங்கினன். முறைப்படி இம் மாதவர் எழுவரும் அதனைத் தாங்கிவர அவன் ஊர்ந்து வந்தான். வருங்கால் இந்திராணிமேல் வைத்த காதற்களிப்பினால் அவன் விரைந்து செல்ல விழைந்து "சர்ப்ப" என்றான். சர்ப்ப என்றால் தேவபாடையில் விரைந்து செல்க என்பது பொருள். அப்பொழுது முற்கொம்பு தாங்கி நடந்த இவர் அவனது அற்பத்தன்மையை நினைந்து அகந்திரிந்து சிறிது

சினந்து "சர்ப்பமாகு" என அச்சொல்லையே தமிழ் மொழியில் மாற்றிச் சாற்றி நின்றார். உடனே அவன் ஓர் பெரும் பாகிப் புரண்டு விழுந்தான். எல்லாரும் மருண்டு நோக்கி வெருண்டு நின்று உண்மையை யறிந்து இவரது சொல்லாற்றலின் தன்மையை வியந்தார்.

"சுருடம்சேர் பரிமகம் நூறு இயற்றி வான் அரசு கன்னற் சுவைபோல் பெற்றான், சருடம்போல் அவன் மனதில் சகிகாமம் பிடித்தலைப்பத் தலைகீழாக, மகுடம்போய், வானகம்போய், வையகம்போய், அரசுபோய், மலைப்பாம்பாக, நகுடன்போய் வீழ்ந்தகதை அறியாயோ! சிறியாயோ! நளினத்தாரோய்" என அவனது அவநிலையைக் குறித்துக்காட்டி இவருடைய தவமகிமையைப் பலரும் இவ்வாறுபோற்றி நின்றார். இவர் ஆற்றிநின்ற இந்த அற்புதச் செயலைப் பல நூல்களும் புகழ்ந்து துதித்துள்ளன.

"மனிதரின் மகவானுகி வருபவன் சிவிகை தாங்கும்
புனிதமா தவரை எண்ணான், புன்கணைப் விளைவும்பாரான்,
கனிதரு காமம் தூய்க்கும் காதலால் விரையச் செல்வான்
இனிது அயிராணிபாற்கொண்டு ஏகுமின் சர்ப்ப என்றான்,
சர்ப்பமாகு என முற்கொம்பு தாங்கிமுன் நடக்குந் தென்றல்
வெற்பனும் முனிவன் சாபம் விளைத்தனன், விளைத்தலோடும்
பொற்பமா சுணமே யாகிப் போயினன் அறிவிலாத
அற்பரானவர்க்குச் செல்வம் அல்லது பகைவேறுண்டோ?"
(திருவிளையாடல்)

"முருடமும் பெருஞ்சேனையும் தரணியு முற்றும்
சகுட நீரெனச் சதமகம் புரி அருந்தவத்தோன்
நகுடன், காமவேல் நராதிபன், நாகருக்கு அரசாய்
மகுடமேந்திய குரிசில் ஆயுவின் திருமைந்தன். (க)

புரந்தரன்பதம் பெற்றபின் புலோமசை முயக்கிற்கு
இரந்து மற்றவள் ஏவலின் யானம் உற்றேறி
வரந்தருங் குறுமுனி முனிவாய்மையால் மருண்டு
நிரந்தரம் பெரும்புயங்கமானவனும் அந்நிருபன்'' (உ)
(பாரதம், குருகுலம், 14–15)

இவருடைய ஒரு சொல்லால் நகுடன் எல்லா நலங்களையும் இழந்து இழிந்துபோனபடியை இன்னவாறு மறுபுல மொழிகளும் நுவல் தருகின்றன.

"ஏந்திய கோள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்'' (குறள் 899)

என்னும் அருமைத்திருமொழி இவரை உரிமைப் பொருளாக்கொண்டு உதித்துள்ளபடியை ஊன்றிப்பார்க்க. வேந்தன் = இந்திரன். இதனால் இவரது விழுமிய நிலைமையும், கெழுமிய தலைமையும் இனிது தெளியலாகும். ஒன்னாரைப் போக்கியும், உவந்தாரை ஆக்கியும் இன்னவகையில் எண்ணரிய செயல்கள் இவர் செய்துள்ளார். இவரது செயல்களால் புண்ணிய நலங்கள் பொங்கி வளர்ந்தன; பாவ நிலைகள் பொன்றி பொழிந்தன. இம்முனிவர் பெருந்தகை எய்தி நின்று செய்து வந்த திறங்களை நினைந்து நினைந்து இப்புவி மகள் பெருமகிழ் வெய்தி நின்றாள்.

எள்ளி நின்றார் தமக்கு எமனாய், ஏத்திநின்றார்க்கு இறை அரனாய்,
இனிய காப்பில்,
தெள்ளுபுகழ்த் திருமாலாய்த், திகழ்படைப்பில் திசைமுகனாய்ச்,
சிறந்து தோன்றி
அள்ளிலைவேல் எம்பெருமான் அணிமலர்த்தாள் அகத்தியைத்த
அகத்தியப் பேர்
வள்ளலிரு மலரடியை உள்ளமுற நினைந்து தினம்
வணங்கி வாழ்வாம்.

# 5-வது இயல்.

## பெருமை

இனி இவரது பெருமையை அறிந்து மகிழ இங்கு உரிமைப்பாயுள்ளோம். "பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின், அருமையுடைய செயல்" (குறள் 975) என்னும் திருமொழிக்கு இவர் ஓர் பொருளாய் நின்று செயல் புரிந்தமை முன்னர் அறிய நின்றது. முற்கூறிய செயல் நலங்களானே இவரது உயர் நிலை இனிது புலனும்; ஆயினும் இவ் அண்ணலின் எண்ணரிய பெருமைகளை இயன்றவரையும் ஈண்டு எண்ணி மகிழ்வோம். எல்லா நூல்களினும் இவருடைய புகழ் மணம் கமழ்ந்துகொண்டிருக்கின்றது.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான் மறைகளுள் முதல்வதாகிய இருக்கு வேதத்தில் இவர் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இவரது சிறப்பு நலங்கள் பலபடியாகப் பாராட்டப்படுகின்றன. சாயனர் வாதாயனர் முதலிய வடமொழி மேதாவிகள் பலர் இவர் செயன்முறைகளை வியந்து போற்றுகின்றனர்.

வானும் வையமும் உய்யும் வண்ணம் இராமகாதையைத் தேனும் அமிர்தமும் என்னச் செய்தருளி அதனால் ஆதிகவி எனப் பேர்பெற்றுச் சீர்மிக்குள்ள மாதவராகிய வால்மீகி முனிவர் இவரது பெயரமைதியையும், அதனைச் சிந்திப்பதனால் வரும் பயனையும் குறித்துத் தமது இராமாயணத்தில் உளமகிழ்ந்துரைத்துள்ளார். வியாசமுனிவரும் தமது நூலாகிய பாரதத்தில் இவரைப் பாராட்டியிருக்கின்றார். மணிமேகலை, கந்தபுராணம், மச்சபுராணம், தணி

கைப் புராணம், காஞ்சிப்புராணம், சேதுபுராணம், காசி காண்டம், தேவிபாகவதம் முதலிய யாவும் இவர் பெருமையை விழுமிதாக விரும்பியுள்ளன.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு" (குறள் 21) என்னும்

அணிமொழிக்கு இவர் துணி பொருளாயுள்ளமை ஈண்டு எளிது தெளியலாகும். அருந்தவர் முதலாக அக்காலத்திருந்த அரசர் பலரும் இப்பெருந்தகையின் திருநாமத்தை இனிய மந்திரமாக எண்ணி நின்றனர். "நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே" என்று முழுமுதற்பரமனோடும் எதிர் நின்று வாதாடிய புலவர் சிங்கமாகிய நக்கீரரும் தலையன்புடன் நிலையாக இவரை வழிபட்டு வந்தனர். வடநாட்டில் வாரணாசியிலிருந்து கோண்டான் என்னும் குயவன் ஒருவன் மதுரைக்கு வந்தான். அவன் வடமொழியிற் பெரிய புலவன். அரிய கலைகள் பலவும் தெளிந்தவன். வடநாட்டிலிருந்த ஆரிய அரசர் பலரும் உவந்து பேண உயர்ந்து நின்றவன். அத்தகைய பீடமைந்த அவன் கூடலம் பதியை யடைந்து சங்கமண்டபத்துள் புகுந்து அங்குத் தங்கியிருந்த புலவர்களுடன் புலமை நலந்தோன்ற உரையாடி யிருந்தான். இருந்தவன் ஒருநாள் வடமொழியே சிறந்தது; தமிழ் அவ்வளவு உயர்ந்ததன்று என்று தருக்கி மொழிந்தான். மொழிப்பற்றோடு கொழுப்புற்றுரைக்கும் அவனது அறியாமைக்கு இரங்கிக் கீரர் எதிரே வந்து தமிழின் அருமை பெருமைகளை இனிது மொழிந்தார். அவன் சிறிதும் இசைந்துகொள்ளாமல் "ஆரியத்தில் ஆரணங்களும் மந்திரங்களும் அமைந்துள்ளன; தமிழில் யாதுளது; ஒன்றும் இல்லையே; என்று மேலும் மேலும் அவன்

நிந்தைபுரிந்து நிமிர்ந்து நின்றான். கீரர் சினந்து "எங்கே! உன் ஆரிய மந்திரத்தைச் சொல்லி என் தலையிலிருக்கும் ஓர் மயிரைக் கீழே வீழ்த்து பார்க்கலாம்!" என்றார். அவன் யாதும் ஆற்றாது விழித்து நின்றான். பின்பு நினைந்து நோக்கி "உமது தமிழ்ச் சொல்லின் வல்லமையால் ஏதேனும் ஒன்று செய்து காட்டும்" என்று அவன் செருக்கி நின்றான். அவர், "முரணில் பொதியில் முதற்புத்தேள்" என நம் முனிவர் பெருமானை முன்னுறத் துதித்து ஆணை கூறி வசைகவி ஒன்றை அவன்மேல் இசைத்தார். உடனே அவன் துள்ளி விழுந்தான்; துடித்துயிர் துறந்தான். பின்பு அவர் உள்ளம் இரங்கி இவ் வள்ளலை நினைந்து அவன் உயிர்த்தெழும்படி வேண்டி மீண்டும் ஒரு கவி விரைந்து பாடினார்.

"ஆரியம் நன்று; தமிழ்தீது என உரைத்த
காரியத்தால் காலக்கோட்பட்டானைச் — சீரிய
அந்தண் போதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா"

என்று இதனை இனிது மொழிந்தார். மொழியவே முன் விழுந்து மடிந்த கோண்டான் எழுந்து நிமிர்ந்து நின்றான். பின்பு உணர்ந்தடங்கி உளந்திருந்திச் சென்றான்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்" (தொல்காப்பியம்)

என்றபடி அன்று அவர், இவர் மேல் ஆணையிட்டு மொழிந்த வண்ணமே நிகழ்ந்தமையை யறிந்து அனைவரும் வியந்தார். யாரையும் மதியாத கீரர் இவரை ஆர்வமுடன் போற்றிவந்த அருமையும், இவரது பெருமையும் இதனால் இனிது அறியலாகும்.

கடைச்சங்க காலத்தில் ஒருமுறை அருளுருக் கொண்டுவந்த பரமன் உமாதேவியாரைநோக்கி,

"கீரன் இலக்கண இலக்கியங்களைக் கலக்கமறக் கற்றவனாயினும் பழுதற்ற புலமைத் தெளிவு இன்னும் நன்கமையவில்லை; அது நன்றமைந்து வர அவனை எங்கு அனுப்பலாம்?" என விநோதமாக வினவினர். அப்பொழுது உமையம்மையார் இவரிடமே அனுப்பியருளும்படி இனிது மொழிந்தார். அங்ஙனம் மொழியுங்கால் எதனால் இங்ஙனம் குறுமுனியைக் குறித்தாய்? என்று இறைவர் குறுநகை செய்தார். தாங்கள் முன்பு குறித்ததிலிருந்துதான் இன்று யான் குறித்தேன் எனத் தேவியார் கூறினர். யான் குறித்தது என்னை? என்று அம் முன்னவர் நோக்க அவ்வமையம் அம்மையுரைத்தபடியை அடியில் பார்க்க.

> "பைத்தலை புரட்டு முந்நீர்ப் பௌவமுண்டவனே எம்மை
> ஒத்தவன்; அனையான் வாழ்க்கைக்கு உரியளாகிய உலோபா
> முத்திரை இமவான் பெற்றமுகிழ் முலைக்கொடி ஒப்பாள்; என்று
> அத்திருமுனியை நோக்கி ஆயிடை விடுத்தாய் அன்றே"

இங்ஙனம் பண்டுமொழிந்தபடியைக் கொண்டு கூறியதைக் கேட்டு அவ்வள்ளல் உள்ளுவந்து கீரனை இவரிடம் உய்த்தார். அவர் வந்து வணங்கி இவர் மருங்கமர்ந்திருந்து அருங்கலைகளை ஒருங்குணர்ந்து சென்றார். அதன்பின், "இனைவறுகுறுமுனி இலக்கணம் பெறப் புனைதரும் இலக்கியப் புலவர் சிங்கம்" என அவர் நிலவி நின்றார்.

அறுமுகப் பெருமானிடம் இவர் அருளுபதேசம் பெற்றிருந்தாராதலால் தமிழ்ப்புலமைக்கு இவர் தலைமை எய்தி அறிவுநிலையம் என நிலவி நின்றார்.

"சிவனை நிகர் பொதியவரை முனிவன் அகமகிழ இருசெவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே" (திருப்புகழ்)

"கூடஞ்சுமந்த நெடுமுடி நேரி
விண்டலையாது மண்புகப் புதைத்த
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்" (கல்லாடம்)

இன்னவாறு இவர் படிமுறை கூறி வருவன காண்க.

தமிழ் இயல் நலங்களை முழுதும் உணர்ந்து விழுமிய நிலையில் இவர் ஓர் நூல் அருளியிருந்தார். அது, இவர் பெயரால் **அகத்தியம்** என நிலவி நின்றது. இடையில் நிகழ்ந்த கடல்கோள் முதலிய காரணங்களால் அது அழிவுற நேர்ந்தது சில சூத்திரங்கள் மட்டும் தலைகால் மாறி நிலைதவறி நூலுரைகளில் அருகிக் காணப்படுகின்றன.

"வயிர ஊசியும் மயன்வினை இரும்பும்
செயிரறு பொன்னைச் செபமை செய் ஆணியும்
தமக்கமை கருவியும் தாமாம்; அவைபோல்
உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே."(1)

"இலக்கிய மின்றி இலக்கணம் இன்றே;
எள்ளின்றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்" (2)

"தொகுத்த கவியைச் சொற்சொல்லாகப்
பகுத்துப் பொருள் சொலல் பதவுரையாமே." (3)

என இன்னவண்ணம் வருவன சில அகத்தியச் சூத்திரங்கள் என்று எண்ணப்படுகின்றன. இயல் இசை நாடகம் என்னும் மும்மைத் தமிழையும் செம்மையுறச் செய்து மக்கட்கு நன்மை புரிந்து பொதியமலையின்கண் நண்ணியிருந்து முதிய புலமையைப் பேணிவந்தாராதலால் இனிய தமிழ் மொழிக்கு முதல்வராக இவர் எண்ண நின்றார்.

"சாந்திக் கூத்தே விநோதக் கூத்தென்று
ஆய்ந்துற வகுத்தனன் அகத்தியன்தானே" (சயந்தம்)
"அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" (பாரதம்)

என இவ்வகையாக மொழிநிலையில் இவர் செயல் வகைகள் பல செப்பப் படுகின்றன. தம் கருத்தைப் பிறர்க்குணர்த்தவும், பிறர் கருத்துக்களைத் தாம் உணர்ந்து கொள்ளவும் கருவியாயமைந்து, மக்கள் இனிது வழங்குதற்குத் தனியுரிமையாயுள்ள மொழிகள் இயல்பான சொல்லுருவிலும், செயலான இசைவடிவிலும், அயலான அவிநய நிலையிலும் இயலுமாதலால் அவற்றை இவர் அழகுற வகை செய்து இயல், இசை, நாடகம் எனத் தெளிவுற இசைத்துள்ளார். இங்ஙனம் கலைநிலையில் இவர் தலைமை எய்தியுள்ளமையால் புலவரெவரும் குலகுருவாக்கொண்டு தம் புலமை நலம்பெற இவரைப்போற்றி நின்றனர்.

"சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமாசாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதும் திகழ்தரற் பொருட்டே"

"முத்தமிழ் அகத்திய முதனூல் உரைத்த
வித்தகன் அடிமலர் விளக்கும்
சித்தநின் றுத்தமச் செந்தமிழ் இயல்பே"

என இவ்வாறு அறிஞர் பலரும் இவரை ஏத்தி வருகின்றனர். "கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்தாம் வரம்பாகிய தலைமையர்;" எனக் கீரர் கூறியவாறு இவர் வீறுபெற்று நின்றார்.

இவர் பெயரைச் சிந்தித்து வரின் கல்வி நலனும், பல்வகை நலங்களும் கைவரும் என்பர். இவர் பெயரால் ககோளமண்டபத்தில் ஒரு நட்சத்திரம் உள்ளது; அது

சில கோட்களுடன் அரிதிற் கலந்து மிதுனத்தையடையின் கடல் நீர் ஆவியாகமாறி வானடைந்து மழைபொழியு மென்ப.

> "போதியின் முனிவன் புரைவரைக் கீறி
> மிதுன மடைய விரிகதிர் வேனில்
> எதிர் வரவு மாரி இயைகென இவ்வாற்றால்
> புரைகெழு சையம் பொழிமழைதாழ" (பரிபாடல் 11)

இவர் கடல் குடித்த செய்தியோடு இவ்வகையில் சில தொடர்கள் இசைக்கப் பெற்றுள்ளன. இவரது அற்புத மகிமை இவ்வுலகத்துமட்டுமன்றிப் புத்தேளுலகத்தும் புகுந்துலாவிப் பொலிந்து நின்றது.

ஞான சீலராகிய இவர் ஒருமுறை வானகம் புகுந்திருந்தபோது இந்திரனது அவைக்குட் சென்றார். இவரைக் கண்டவுடனே அவ் அமரர்கோன் மிக வியந்து பெருமகிழ்ச்சிகொண்டு புகழ்ந்துபசரித்து ஓர் சிறந்த ஆசனத்தில் இருக்கச்செய்து இதம் பல செய்தான். சிலநாள் அங்குத் தங்கியிருக்கும்படி விழைந்து வேண்டினன். இவரும் இசைந்திருந்தார். இசையில் மிக வல்லுநராதலால் இவரை இன்புறுத்த விரும்பி ஒருநாள் சுதர்மை என்னும் தனது விழுமிய தெய்வமணி மண்டபத்தில் உருப்பசியை வந்து அவள் நடிக்கப் பணித்தான். அவளும் உவந்து வந்தாள். கானவிச்சையில் பெரும் புகழ்வாய்ந்த சித்திரசேனன் என்னும் கந்தருவன் சதி முதலியவற்றை வரையறைசெய்து புடைதழுவி நிற்ப, நாரதர் யாழ் வாசிக்கக், கைதேர்ந்த பலரும் தத்தம் பணியைப் பக்கம் நின்று செய்ய மிக்க எழிலோடு அவள் அங்கு மேவி நின்றாள். தாளமுதலிய மேளவகைகள் யாவும் தகவுடன் முழங்கச் சதுருடன் நிகழ்ந்தது.

அமரகணங்கள் யாவரும் அக்காட்சியைக் காணவந்து களி கூர்ந்திருந்தனர். இந்திரன் வலப்புறத்தே இம் முனிவர் பெருந்தகை மாட்சியோடு இனிது வீற்றிருந்தார். அவள் சதிமிதித்து முதன்முறை இனிய இசையோடு அழகொழுக வெளிவந்தாள். அவ்வமயம் அங்கிருந்த இந்திர குமாரனாகிய சயந்தன் காதல்மீக் கூர்ந்து அவளைக் கனிந்து நோக்கினன். "கண்ணின்மேற் கலந்தாளோ? கருத்தின்மேற் புகுந்தாளோ? பண்ணின்மேல் வரிச்சுரும்போ? தும்பியோ? படர் மயிலோ?" என்று அவன் இடருழந்தான். அவளும் அவன்மீது தன் கண்ணைச் செலுத்தினள். இங்ஙனம் கள்ள விழி போராட அவள் உளநிலை மாறினள்; மாறினும் தான் உற்ற நடனத்தை ஊக்கி வந்தாள். வரினும் அதில் நுண்ணிதாய் நேர்ந்து வரும் வழுவினை நாரதர் நுனித்தறிந்தார். கலகப்பிரியராதலால் அப் பிழை நிலையை இவர் காணவேண்டுமென்று கருதித் தனது யாழில் மாறுபட்ட ஓர் நரம்பினைப் பனித்துக் காட்டினர். முன்னதாகவே அவ்வுண்மையை நன்கறிந்திருந்தும் தண்ணளியுடையராதலால் புன்னகைசெய்து பொறுத்துவந்த இவர் அவர் செய்ததைக் கண்டவுடனே கடுத்து அச் சயந்தனை மூங்கிலாகவும், அவளைக் கணிகையாகவும், அவ் வீணையை மாணிழந்த மனையாகவும், மண்ணில் போய்த் தங்கும்படி சபித்தார். இவர் சினந்தவுடனே நாரதரே நடுங்கினர் என்றால் வேறுகூறுவதென்? இந்திரன் அஞ்சியெழுந்து காமக்களிப்பால்நேர்ந்த இப்பிழையினைப் பொறுத்தருளி இட்ட சாபத்திற்கோர் முடிவினை அடிகள் ஆற்றியருளவேண்டுமென்று போற்றி வேண்டினன். அவ்வாறே கருணைசெய்து ஒரு காலவரையறையை அருள்புரிந்துவிட்டு இவர் அகன்று போயினர்.